மெய்ப்பொருள்
காண்பதறிவு

# ஆளுமை



## அமரர் மு.கதிர்காமநாதன்

# நினைவேடு

கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச் சங்க

## முன்னாள் தலைவர், அமரர்.மு.கதிர்காமநாதன்

அவர்களின் நினைவாக வெளியிடப்படும்

# நினைவேடு

தொகுப்பு

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

ப.க. மகாதேவா

மெய்ப்பொருள் காண்பதறிவு

கொழும்புத் தமிழ்ச்சங்கம்,
இல 7, சங்கம் ஒழுங்கை,
கொழும்பு - 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர்தமானவர்

சட்டத்தரணி ஜீ.இராகுலேந்திரா
தலைவர் - கொழும்புத் தமிழ்ச் சங்கம்

காலம் - காலத்துக்குக் காலம்

காலம் கடந்தும் காலகாலங்கள்

கற்சிலை போல் தத்தம்

நற்சிந்தனையால் செயற்கரிய செயலால்

செவ்விய நெஞ்சத்திறத்தால்

வாழும் மாந்தரை வையத்துக்கு வழங்கியுள்ளது.

அத்தகு தக்கார் ஒருவரே கொழும்புத் தமிழ்ச்சங்கத்தை

தாயினும் சாலப்பரிந்த நன்மனத்தோடு

தலைவராயிருந்து புரந்த நம் எல்லாரதும் மனங்களில் குடிகொண்ட

முழுநிலவெறி முகம் கொண்ட முத்தையா கதிர்காமநாதன்

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடும்

சிறுமை உலகம் இது.

பாடுபட்டுத்தேடிய பணத்தைப் புதைத்து

ஈயாது விடுத்து தீயார் கொள்ளப் பார்த்திருக்கும்

பாவியர் நிறைந்த பார் இது.

இத்தகு ஈன உலகில் ஈதல் இசைபட வாழ்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுமிவையே உயிரின் இலக்கு என உணர்ந்து

வாழ்ந்து காட்டியவர் மு.கதிர்காமநாதன்.

வணிகத் தொழிலில் செல்வம் திரண்ட வேளையிலேயே

தேடிய தேட்டம் போதும் என அதிலிருந்து விலகி

மாநிலம் பயனுற வாழ்வதே மனிதப்பிறப்பின் நோக்கம்

என்ற மகத்தான இலட்சியத்தை மனத்தில் வரித்துக்கொண்டு

சமூகப்பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர்

தாளாண்மைச்செல்வர் கதிர் என அழைக்கப்பட்ட கதிர்காமநாதன்.

அவரது முடிவிலா முறுவலும் தேனின் கசிவந்த சொல்லும்

இதயமார்ந்து அணைக்கும் அழைக்கும் கரங்களும் நாவும்

அவரது ஆளுமையின் மொத்தச் சொத்து.

தமிழும் சைவமும் தழைக்க ஒல்லும் வகையெலாம்

அவற்றைப் பரவவைக்க அவர் எடுத்த விழாக்களும்

பங்கு கொண்ட மாநாடுகளும் சாலும் கரியாகும்.

வண்மை மனத்திண்மை என்பன நிறைந்து

நல்லவன் அன்பன் நன்றி மிகுந்தவன்

என்ற வான்புகழோடு வாழ்வை நீத்த

கதிர்காமநாதன் அமிர்தம் ஆனவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நேசர் அமரர் மு.கதிர்காமநாதன்

ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி
பொதுச் செயலாளர்

கம்பீரமான தோற்றம், கருணை பொங்கும் விழிகளால் கவர்ச்சிபெற்று விளங்கும் முகவிலாசம், சதா தவழும் புன்னகை, பணிவான பேச்சு அமரர் மு.கதிர்காமநாதன் வகித்த பதவிகளில் வெற்றிகளை மேலும் மேலும் வென்றெடுக்கக் காரணமாய் அமைந்தவை. மிகவுயர்ந்த சமயப்பற்று அவருடன் சில நிமிடங்கள் பேசிப்பழகியவர்க்கும் தெற்றெனப்புலப்பட்டுவிடும் கனிவும், தழைவும் பொங்க அவர் பேசும் வார்த்தைகளால் ஈர்க்கப்படாதவர்களே இல்லை எனலாம். மொழிப்பற்று, கடமைப்பற்று கலாசாரப்பற்று சமூகப்பற்று அமரர். கதிர்காமநாதனிடம் செறிந்து காணப்படுகின்றன. தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்த போது சேவை மனப்பான்மை, மற்றவர்களின் வசதியை கருத்தில் கொள்ளல் அடிப்படைக் கொள்கைகளில் நிதானமாக இருந்தல் இவரது செயற்பாடு ஆகும். இவர் தமிழ்ச் சங்கத்தில் 2010 - 2012 வரையும் மீண்டும் 2015லும் தலைவராகக் கடமையாற்றினார். இவர் தமது காலத்தில் திருக்குறள் மாநாடுகளை சிறப்பாக நடாத்தினார். முப்பால் நூல் வெளிவந்தது. ஓலை என்ற சங்கச் சஞ்சிகை சங்கத்தமிழாக வெளிவந்தது. 3 ஆம் மாடியில் ஐந்து விருந்தினர் அறைகள் பூர்த்திசெய்யப்பட்டன. கௌரவ அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அவர்களுடன் தொடர்பு கொண்டு ரூபா பத்து இலட்சம் பெறுமதியான கதிரைகள், கணினிகள், போன்றவை பெற்றுக் கொடுத்தமை சங்க முத்திரை வெளியிடப்பட்டது. சங்கமுகப்பு அழகாக அமைத்தது போன்ற பங்களிப்பு ஆகும். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தை பொறுத்தவரையில் அவரது மறைவு இடை நிரப்பமுடியாத பேரிழப்பாகும்.

ஆளுமை மிக்க இவர் கொழும்புத் தமிழ்ச் சங்க தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றப் பொதுச் செயலாளர், உலக சைவப் பேரவை இலங்கைக்கிளைச் செயலாளர், விவேகானந்த சபை துணைத்தலைவர், இன்னும் பல்வேறு நிறுவனங்களில் நிர்வாகக்குழு அங்கத்தவராக இருந்தவர். இப்பதவிகள் இவரால் பயன்பெற்றன. அன்பு மயமான தம் கணவரை இழந்து துயருறும் பாரியார் நெஞ்சத்திற்கு ஆறுதல்கூற வார்த்தைகள் கிடையாது. அவர் சுற்றம் அன்பர்கள் அனைவரும் இந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டுகொள்ள காலம் ஒன்றுதான் வழிசெய்ய வல்லமை மிக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதிச் செயலாளரின் நினைவில் ........

செல்வ திருச்செல்வன்
நிதிச் செயலாளர்

ஆறு ஆண்டுகளுக்கு முன் கலாநிதி.மு.கதிர்காமநாதன் அவர்கள் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் தலைவராகப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட போது நானும் நிதிச்செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டேன்.

அதுவே அவருடனான எனது முதல் சந்திப்புமாகும். அதற்கு முன் தமிழ்ச் சங்கத்துடனான தொடர்பு, தேர்தல் அன்று வாக்களிக்கச் செல்வதுடன் முடிந்து விடும்.

முதல் சந்திப்பில் ஓர் அழகான மனிதரைச் சந்தித்தேன். இயல்பாகப் பழகும் தன்மை, வயது வேறுபாடின்றி மரியாதையுடன் விளிக்கும் பண்பு, சிரித்துக் கதைக்கும் ஒரு மனிதராகவே நான் அவரை அடையாளப் படுத்திக்கொண்டேன்.

சிறிது காலத்தின் பின் தான் அவரின் ஆளுமையைப் புரிந்து கொண்டேன். ஆளுமை என்றால் தான் சாதிக்க விரும்பியதை எல்லோரையும் தன்வசப்படுத்தி முடித்துக் காட்டும் ஆளுமை. அரிதாய்க் காணக்கிடைத்த ஆளுமை. அதற்கு முன் சிலகாலமாகத் தமிழ்ச்சங்கம் சந்தித்திராத ஆளுமை.

அவருக்கும் எனக்கும் இடையில் இயல்பாகவே ஓர் புரிந்துணர்வு ஏற்பட்டது. அதன் வழியாய் நாம் பல விடயங்களைச் சாதித்துக்கொண்டோம். தலைவர் குணரத்தினம் ஐயா அவர்கட்குப் பின் அதிக ஆற்றலுடனும் ஆளுமையுடனும் செயற்பட்ட தலைவராகவே இவர் காணப்படுகிறார். அவர் சாதித்தவையே அதற்குக் கட்டியம் கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட ஆண்டுகளுக்குப் பின் மூன்றாம் மாடியில் 5 அறைகள் கட்டப்பட்டு சங்கம் மேலதிகமாக வருமானம் பெற்று நிதிச் செயற்பாட்டில் தன்னிறைவைக் கண்டமை, சங்கரப்பிள்ளை மண்டபத்தினை விஸ்தரித்தமை, நூலகத்தைக் கணினி மயப்படுத்தலுக்கு ஏதுவாக மறுசீரமைத்தமை, சங்கத்தின் முகப்புக் கோபுரத்தை அமைத்தமை, திருக்குறள் மாநாடு, நாவலர் விழா, முப்பால், நாவலர் சிறப்பு மலர், நடந்தாய் வாழி, கோபுரம், பூவல் சிறப்பு வெளியீடுகள், பல லட்சம் ரூபாவை நிரந்தர வைப்பிலிட்டமை, ஊழியர்களுக்கான 40% சம்பள அதிகரிப்பு, 57வது வீதி "சங்க வீதியாகப்" பெயர் மாற்றம் என்பன அவற்றில் சிலவாகக் குறிப்பிடலாம்.

திட்டமிட்டு செயல்படுவதிலும் களத்தில் நின்று போராடும் குணமும் அவருக்கு இயல்பானது. துணிந்து நின்று எதிர் கொண்டு வெற்றி கொள்ளும் மனத்திடம் கொண்டவர். அவர் போராடித் தோற்றுப்போனது காலனிடம் மட்டுமே - அவன் தேவகணம் அல்லவா.

இம்முறை தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவுடன் தமிழ்ச்சங்கத்தின் 75ம் வருடபூர்த்தி விழாவை கொண்டாடுவதும், மின்தூக்கி அமைக்க வேண்டுமென்ற எண்ணமுமே அவரின் மனதில் மேலோங்கி நின்றது. அதுவே அவரின் பேச்சில் எந்நேரமும் நிறைந்திருக்கும்.

நிறைவடையாத அந்த ஆவலை நிறைவேற்றுவதே அன்னாரை நினைவு கூர்வதற்கும், அவரின் ஆத்மா சாந்தியடைவதற்கும் எமக்குரிய செயற்பாடாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்சங்கத்தின் இயக்கவியலை விசைப்படுத்திய செயற்பாட்டாளர்

பேரா.சபா.ஜெயராசா்

சமூகத் தலைமைத்துவப் பண்பின் (SOCIAL LEADERSHIP)நல்லியல் தழுவிய எழுச்சியுடன் வாழ்ந்தவர் அமரர் மு.கதிர்காமநாதன். மாற்றுக் கருத்துள்ளோரையும் அரவணைத்து நிறுவன இயங்கியலை வளர்த்த அவரது பணிகள் நிலைத்த சுவடுகளாகின்றன.

அவர் கவனம் செலுத்திய ஒரு முக்கியமான துறை குழுவின் இயக்கவியல் (GROUP DYNAMICS). தமிழ்ச் சங்கம் என்ற தமிழியற் குழுவின் செயற்பாட்டை ஆக்க நிலையில் இயங்க வைப்பதற்கு அவர் மேற்கொண்ட பணிகள் முக்கிய மானவை. தமிழ்ச் சங்கம் ஒரு இயக்கமாக மேற்கிளம்பியது.

ஒவ்வொருதுறைக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து செயற்பாடுகளை ஒன்றிணைத்து வினையாற்றலை வலுவுள்ளதாக மாற்றி தமிழ்ச் சங்கத்தை மேலெழச் செய்தமை அவருக்குரிய தனித்துவமாகின்றது.

தமிழ்ச் சங்கத்தின் பணிகள் பலகோணங்களிலே விரிவடையத் தொடங்கி யுள்ளன. கல்வி, நூலகம், இலக்கியம், வெளியீடுகள், நுண்கலைகள், ஆய்வுகள் என்றவாறு தமிழியற் பணிகளின் பெருக்கத்தின் ஊடே தலைமைப் பொறுப்பை ஏற்பவர்கள் முழுநேரம் இயங்க வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். தமது பிற வேலைப்பளுக்களின் ஊடே தலைமைத்துவ வகிபாகத்தை திறம்பட மேற்கொண்டவர் அமரர் மு. கதிர்காமநாதன்.

சங்க உறுப்பினர்களைப் பொறுத்தவரை அவர் ஒரு சீர்மியராகத (COUNSELLOR) தொழிற்பட்டவர். மனம் தளர்ந்து இருப்போரை உற்சாகப் படுத்தியும் அவர்களின் இன்பதுன்பங்களிலே பங்கு கொண்டும் நல உதவிகள் செய்தும் உளநல மேம்பாட்டுக்கு வலுவூட்டியவர்.

உறுப்பினர்களின் திறமைகளைக் கண்டறிந்து அவர்களுக்குரிய பொறுப்புக்களை வழங்கி, நிறுவனத்தின் செயலாற்றலை உன்னதங்களை நோக்கி நகர்த்திய அவரின் தனித்துவமான முகாமைத்துவத் திறன் ஏனையோருக்கும் ஒருவகிபாக மாதிரியாக (ROLE MODEL) இருந்தது.

அவரின் பன்முக ஆளுமைப் பரிமாணங்களினது எழுச்சியூடே நகரும் நிறுவனமாக விளங்கும் தமிழ்ச் சங்கம், அவர் பத்தித்த சுவடுகளுடன் தொடர்ந்து ஏற்றம் பெறுதலை தமிழ் வழங்கும் உலகம் எதிர்பார்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகு பயன்பெற வாழ்ந்த உத்தமன்
# கதிர்காமநாதனே!! காலத்தைவென்று வாழியநீ

கலாபூசணம் சைவப்புலவர்
சு.செல்லத்துரை

கண்டோரைக் கவர்ந்திழுக்கும் கனிவானமுகத்தழகும்
கருணை ததும்புகினற கரும்பான பேச்சழகும்
நண்பர்களைத் தழுவுகின்ற நயமானகையழகும்
நாளும் மலர்ந்திருக்கும் நன்முகத்தின் பொலிவழகும்
அன்பால் அனைவரையும் அரவணைக்கும் மனத்தழகும்
அனுதினமும் பணிசெய்யும் சிந்தனையின் செயலழகும்
பொன்போல் சொரிகின்ற புன்னகையின் பூவழகும்
புண்ணியனேஎங்கள் மனத்திருத்திப் போயினையே

எத்தனையோ நாடுகளில் எத்தனையோ மாநாட்டில்
சித்தம் மகிழ்ந்தேநீ சீராகப் பங்குபற்றி
அத்தனைஅனுபவமும் சேர்த்திங்கே கொண்டுவந்து
மெத்தப் பயன்தரவே மேன்மையாய்த் திட்டமிட்டு
இந்துமாமன்றத்தும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தும்
உலகசைவப் பேரவையின் ஊடாயும் பலர் போற்ற
இந்நாட்டு மக்கள் பயன் பெறவே பணிசெய்த
வல்லோனே காலத்தை வென்றுநீ வாழ்ந்திருப்பாய்

உலகம் பயன்பெற வாழ்ந்திடுவாய் நீயென்றே
உடல் பொருள் ஆவியை உவந்தளித்தி றையருளை
உலகிற் குணர்த்திவைத்த உத்தமனே உன்னுடைய
பணியெல்லாம் இந்தஉலகிற்குப் பாடம் ஐயா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாளாண்மை கொண்ட தகைசான்றோன்

தம்பு சிவசுப்பிரமணியம்
துணைத் தலைவர்

*"தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு"*

'ஆள்வினை உடைமை' என்னும் அதிகாரத்திலே வள்ளுவனார் இக்குறளை முன்வைத்துள்ளார். எல்லோருக்கும் உதவ வேண்டும் என்ற நல்லசெயல், விடா முயற்சி என்ற பண்பால் நிலைத்து நிற்கும். இந்தப் பண்புக்கு இலக்கணமாக வாழ்ந்து தகைசான்றோனாகப் பெருமைபெற்ற அமரர் அன்புமிகு முத்தையா கதிர்காமநாதன் அவர்கள் இன்று எம்முடன் இல்லை.

இவர் ஒரு செயல் வீரனாகத் திகழ்ந்தார் என்பதற்குப் பல உதாரணங்களை முன்வைக்கலாம்.

*"பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்"*

அதாவது செய்யும் பொருள், உரிய கருவி, தகுந்தகாலம், செயலின் தன்மை, ஏற்ற இடம் ஆகிய ஐந்தையும் ஆராய்ந்து சிந்தித்துச் செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அமரர் கதிர்காமநாதன் அவர்கள் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்த காலப்பகுதியில் ஆற்றிய பணிகளுக்கு இக்குறள் பின்புலமாக இருந்துள்ளது என்று கூறினால் முற்றும் பொருந்தும். அவரது செயற்பாடுகள் யாவும் திட்டமிட்டு ஆராய்ந்து செயலுருப் பெற்றுள்ளன.

பிறப்புகள் எல்லாவற்றிலும், மானிடனாகப் பிறப்பதே மேல் என்று கற்றறிந்தோர் கூறுவர். மனிதர்களாக வாழ்ந்து காட்டிய மாமனிதர்கள் மக்கள் மனங்களில் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையிலே மக்கள் நலனுக்காக வாழ்ந்த அமரர் என்றும் மக்கள் மனங்களைவிட்டு நீங்காமல், என்றும் வாழ்ந்துகொண்டே இருப்பார்.

மனஉறுதி, செயல்திறன், எண்ணிய காரியத்தை முடிக்கும் திண்ணியம், போன்ற வினைத்திட்பம் அன்னாரிடம் இருந்துள்ளது. அதனால் அவர்பலராலும் அவதானிக்கப்பட்ட மனிதராக இருந்துள்ளார். எல்லோரிடமும் இத்தகைய பண்புகளை ஒன்று சேரக் காணமுடியாது. அந்த வகையில் அமரர் கதிர்காமநாதன் தனித்துவம் மிக்கவராக இருந்து வாழ்ந்து காட்டினார்.

பிறப்பவர் அனைவரும் இறக்க வேண்டும் என்பது உலக நியதி, அதை எவராலும் மாற்றமுடியாது என்றிருந்த போதிலும், அவர் பிறந்து வாழ்ந்த வாழ்க்கை ஏனையோருக்குப் பயனுள்ளதாக அமைந்திருக்குமானால், அவர் இறவாவரம் பெற்றவராகவே என்றும் வாழுவார்.

அமரர் கதிர்காமநாதன் அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை, தமது கடமைகளில் பொறுப்புடன் செயலாற்றிய விதம், குடும்பத்தவர்கள் மேல் அவர் கொண்டிருந்த பாச உணர்வு, தாய்மொழி மீதும் சமயத்தின் மீதும் அவருக்கிருந்தபற்று, எல்லோரையும் இன்முகம் காட்டி அரவனைக்கும் பெருந்தன்மை என்பன இன்றைய இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டியாக அமையும். குறிப்பாக இளைஞர் யுவதிகளின் கல்வியில் அவர் காட்டிய கரிசனை போற்றுவதற்குரியது. கஷ்டப்படுகின்றவர்களின் வலிகளை உணர்ந்து அவர்களுக்கு உதவுவதில், அவரின் ஆர்வம் மேலோங்கியிருந்தது.

*"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
*நன்மை கடலிற் பெரியது"*

பயனைக் கருதாமல் தக்க சமயத்தில் செய்த உதவியை ஆராய்ந்தால் அது சமுத்திரத்தைவிடப் பெரிதாகும்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சியில் அன்னார் காட்டிய அளப்பரிய சேவையை என்றும் மறக்கமுடியாது. அர்ப்பணிப்பு, சகிப்புத் தன்மை, புன்முறுவல் ஆகியன எவரிடமும் ஒன்றுசேரக் காணமுடியாத பண்புகள் அவரின் தனித்து வங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998 ஆம் ஆண்டு தமிழவேள் க.இ.க.கந்தசுவாமி ஐயா அவர்களின் அழைப்பின் பேரில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினராக இணைந்துகொண்ட கதிர்காமநாதன் அவர்கள், சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக, துணைத் தலைவராக, மூன்று தடவைகள் தலைவராகப் பதவிவகித்து மகத்தான பணிகளைப் பெருமைப்படும் வகையில் ஆற்றியுள்ளார்.

சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தமிழ் இலக்கிய விழா, வள்ளுவர் விழா, நாவலர் விழா, பாரதி விழா போன்ற விழாக்களை முன்னின்று நடத்திப் பெருமை கண்டவர். சங்கத்தின் எழுபதாவது ஆண்டு விழாவை அதி உன்னதமாக நடத்தி, அஞ்சல் முத்திரையும் வெளியிட்டு வைத்தவர்.

மேலும் சங்கம் முன்னெடுக்கவுள்ள சிலப்பதிகாரப் பெருவிழா, உலகத் தமிழ் இலக்கியப் பெருவிழா, மற்றும் முக்கிய விழாக்களை நடத்துவதற்கான திட்டங்களை முன்னெடுப்பதில் அவர் கொண்டிருந்த அக்கறையை நினைத்துப் பார்க்கிறேன்.

எல்லாப் பெருமைக்குமுரிய செயல்வீரன் 17.01.2016 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற ஆட்சிக்குழுக் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது மயக்கமுற்ற நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். சிலதினங்கள் மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெற்று வந்த போதிலும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. 02.02.2016 அன்று தமது 71 ஆவது வயதில் இயற்கை எய்தினார். அவர் மறைவு தமிழ்ச் சங்கத்திற்கும், தமிழ் கூறும் நல்லுலகத்திற்கும் பேரிழப்பாகும்.

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையாளன் அமரர் கதிர்காமநாதன்

த.அரியரத்தினம்

துணைத் தலைவர் - கொ.த.ச.

சேவை இன்றைய தேவை.

அறப்பணிகளும் ஆலயப்பணிகளும் சமூகப்பணிகளும் இன்றைய சமுதாயத்திற்கு தேவைப்படுகின்றன. பிறர் துன்பங்களை துடைக்கும் பணி அது. நம் மனதை நிறைவடையச் செய்கின்றது.

சேவையாளனைப் பற்றி ஓர் அறிஞர் கூறுகின்றார். "பன்முகப்பட்ட பாதிப்புக்கள் காரணமாக உடல், உளரீதியாக சோர்வடைந்துள்ள மக்களின் தேவைகளை அறிந்து உணர்ந்து கொண்டு மனிதாபிமானத்துடன் பன் முகப்படுத்தப்பட்ட உதவிகளை செய்பவனே சேவையாளன்".

சமுதாயத்தில் சிலர் மட்டும் தம் ஆசைகளைக் குறிப்பிட்ட இலக்குகட்கு உட்படுத்தி அன்புப்பணியாக, அறப்பணியாக ஆன்மீகப்பணியாக, சமூகப்பணியாக பிறர் துன்பம் துடைக்கும் பணியாக தம் வாழ்நாட்களில் ஒரு பகுதியை ஒதுக்கி தம் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்கிறார்கள். இத்தகையோரே ஆளுமை, தலைமைத்துவம், சேவை மனப்பாங்கு, பிறருக்காக உழைக்கும் உவகை மற்றவர்களது வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாவர்.

இத்தகைய வாழ்க்கை முறையில் பழக்கப்பட்டவர்களில் ஒருவர்தான் அமரர் முத்தையா கதிர்காமநாதன். அவர் செய்த பணிகளினால் இன்று இலட்சிய மனிதனாக மற்றவர்களினால் நேசிக்கப்படுகின்றார். மதிக்கப்படுகின்றார். ·

அவரின் இறுதி மூச்சே தமிழ்ச்சங்கம்தான். தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு கூட்டத்தில் தலைமை தாங்கி நடத்திக்கொண்டிருக்கும் போதே நினைவிழந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதுமட்டுமல்லாமல் தமிழ்ச்சங்க தமிழிசை விழா சிறப்புற நடக்க வழிவிட்டு விழா முடிந்த பின்பு அமரத்துவம் எய்தியவர். ஆகவே அவர் மனநிறைவடைந்திருப்பார் என்பது திண்ணம்.

அவரின் ஆத்மா சாந்தியடைவதாக....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் மு.கதிர்காமநாதனுக்கு அஞ்சலி

பேராசிரியர் சோ.சந்திரசேகரம்

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவராகப் பலமுறை பணியாற்றிய அமரர்.மு.கதிர்காமநாதன் அவ்வாறு தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் வேளையில், எமது கண்ணெதிரிலேயே மயங்கி விழுந்து அதிர்ச்சியைத் தந்தார். என் கடன் பணிசெய்து கிடப்பதே என்று செயற்பட்டு வந்த அமரர், பணியைத் தான் கவனித்தாரே ஒழிய தனது உடல் ஆரோக்கியத்தில் எந்த அளவு அக்கறை செலுத்தினாரோ தெரியவில்லை.

தமிழ்ப் பணியினால் மட்டும் திருப்தி அடையாது சைவப் பணியிலும் ஈடுபாடு கொண்டவராய் இந்துமகா சபை, உலகச் சைவப் பேரவை என்பவற்றிலும் சமயப் பணியாற்றி சைவர்களையும் கவர்ந்தார். தாய் மொழியாகிய தமிழின் வளர்ச்சியையும் சைவத்தின் மேன்மையையும் வெவ்வேறாகப் பார்க்காத அமரர் இரண்டின் மேம்பாட்டிலும் பங்களிப்பு ஆற்றுவ்தைத் தமது வாழ்க்கைப் பணியாகக் கருதினார்.

இரு தசாப்த காலமாக கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இணைந்து கொண்ட அமரர் அவர்கள் தமது அர்ப்பணிப்பு ஈடுபாடு காரணமாக பல உறுப்பினர்களின் கருத்தைக் கவர்ந்தார். இதன் காரணமாக அவர்களுடைய ஆதரவுடன் அவர் சங்கத்தின் தலைவராக பணியாற்ற முடிந்தது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பணிகளை வகைப்படுத்திக் கூறினால் அவை அனைத்திலுமே அமரர் அவர்களின் உறுதியான தொடர்ச்சியான பங்களிப்பு இருந்தது என்பதை நான் அவதானித்து வந்துள்ளேன். தமிழ்ச் சங்கத்தின் தமிழ் சார்ந்தகலை இலக்கியமேம்பாட்டுப் பணிகளைப் பிரதானமாகவும் அதற்கு உறுதுணையாக அமையும் சங்க உட்கட்டமைப்பு வசதிகளை அடுத்த வகையின தாகவும் பிரித்துக் கூற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரு வகைப்பாடுகளை மட்டும் வைத்துநோக்கும் இடத்து அமரர் அவர்கள் இந்த இரண்டிலுமே மிகுந்த அக்கறையைச் செலுத்தி வந்தார் என்பதை உறுதிபடக் கூற முடியும். தமிழ்ச் சங்கம் நடாத்தி வருகின்ற சகல மகாநாடுகள் மாதாந்தக் கூட்டங்கள் கருத்தரங்குகள் இசை விழாக்கள் என சகல நிகழ்ச்சிகளையும் திட்டமிடுவதிலும் அவை நடைபெறும்போது அவற்றில் அடக்கமாகப் பங்குகொள்வதிலும் அமரரின் பங்கு பாராட்டத்தக்கதாக இருந்தது. பிரதானமான இலக்கிய விழாக்களை திட்டமிடும் போது அவற்றின் பல்வேறு பரிமாணங்களை உணர்ந்தவராய் சகலருடைய ஒத்துழைப்பையும் முழுமையாகப் பெறும் வகையில் தமது தமிழ்ச் சங்கப் பணியை திறமையுடன் ஆற்றி வந்தார். இதன் காரணமாகவே அவர் எமது பாராட்டையும் ஒத்துழைப்பையும் பெற்றார் .

நான் அவரை மற்றொரு காரணத்துக்காகவும் அவரது மறைவுக்கு முன்னரே பாராட்டிவந்தேன். எமது தமிழ் மக்கள் மத்தியில் இருக்கின்ற பின்தங்கிய பிரிவினரின் மீது அமரர் அவர்களுக்கு ஒரு விசேட அபிமானமும் அன்பும் உண்டு. இவ்வாறான பிரிவினரின் கூட்டங்களிலும் நிகழ்ச்சிகளிலும் நான் பங்குபற்றிய போதெல்லாம் அமரர் அவர்களும் அங்கு வந்து கலந்து கொண்டு அந்நிகழ்ச்சிகளுக்கு உற்சாகம் வழங்கியதை நான் அவதானித்துள்ளேன். செல்வந்தர் வறியவர் என்று பாராது அனைத்து மக்களையும் சமமானவர்களாகக் கருதுபவர்களே தலைமைத்துவத்தின் பல உச்சங்களை எட்டமுடியும் என்பதை அன்னார் நிரூபித்துக் காட்டினார். அவரது ஆத்மாசாந்தியடைய உளமாரப் பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாக உழைத்தவனே!

கம்பவாரிதி இ.ஜெயராஜ்

வற்றாத முகச் சிரிப்பு வறுமையின்றி
வார்த்தையிலே எப்போதும் தேன் இனிப்பு
கற்றோர்கள் தமைக் கண்டால் களித்து நிற்கும்
கண்ணியத்தில் உவமையிலாப் பெருவிருப்பு
சற்றேனும் சோர்வுபடா உயர் உழைப்பு
சாற்றுவதை நிறைவேற்றும் தனி முனைப்பு
முற்றாத வயதினிலே காலன் கொள்ள
முன்சொன்ன தகுதிகளே விடயமாச்சோ?

ஏற்றமுறு தமிழ்ச்சங்கத் தலைவனானாய்
இயல்பாக இந்துமா மன்றந்தன்னின்
போற்றுகிற செயலளனாகி நின்றாய்
பொலிவுடனே இந்துப் பேரவையில் நல்ல
மாற்றமிலா பெருந்தொண்டன் ஆகி நின்றாய்
மனக்கினியோய் எல்லோர்க்கும் சோர்வே யின்றி
காற்றெனவே உழைத்தவனே! கடிதிற் சென்றால்
கற்றவர்கள் என் செய்வார் கலங்கிடாரோ?

எங்களது கம்பனவன் கழகந்தன்னை
எப்போதும் நேசித்த இனிய ஐய!
பொங்குகிற விழவுகளில் முன்னே நின்று
புன்சிரிப்பால் ஈர்த்திடுவாய் அனைவர் தம்மை
பங்கமிலா உன் குணத்தால் அன்பே பொங்க
பாரில் எமக்குறவென்று பரிந்து நின்றாய்
தங்கி எமைக்காக்காமல் போனதென்னே?
தமைய மறந்து வானுலகம் சென்றதென்னே?

வற்றாத உன் பெருமை காலம் தாண்டி
வளமாக நிற்கும் அதில் ஐயம் இல்லை
பற்றோடு தமிழ் வளர்த்த ஐய! உந்தன்
பற்பலவாம் பணிகளிலே நிலைத்து நிற்பாய்
கற்றோர்கள் நெஞ்சமெலாம் காலந்தாண்டி
கதிர்காமநாத உனதன்பு நிற்கும்
சற்றேனும் சோர்வு படா தமிழ வேளே
சரித்திரமாய் ஆனவனே அமைதி கொள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோர் நலனிலும் இன்பம் கண்ட "கதிர்"

கந்தையா நீலகண்டன்

*"நல்லாரைக் காண்பதுவும் நன்றே - நலமிக்க*
*நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்*
*குணங்கள் உரைப்பதுவும் நன்றே - அவரோடு*
*இணங்கியிருப்பதுவும் நன்றே"*

என ஔவை மூதாட்டி உரைத்த மூதுரையை, மறைந்த நண்பர் "கதிர்" எங்களுக்கு என்றும் நினைவூட்டிவந்தார்.

பெரியார் கல்விமான் குமாரசுவாமி சோமசுந்தரம் தனது "மனித விழுமியங்கள்" என்ற நூலில் இப்படி எழுதியிருக்கிறார்:-

"மனிதர்களிடம் ஆற்றல்கள் நிறைய உள்ளன. அவை அவர்களிடம் உள்ளார்ந்த நிலையில் அடங்கிக் கிடக்கின்றன. தம்முள்ளே இருக்கும் ஆற்றல் களை முழுமையாக அறிந்து கொள்ளாமலேயே காலத்தைக் கழித்து வருகின்ற மனிதர்கள் பலர் காணப்படுகின்றனர்.

"மனிதர்கள் ஒவ்வொருவரும் தன்னை அறியவேண்டும் தன்னுள்ளே காணப்படுகின்ற ஆற்றல்களை உணர்தல் வேண்டும். அப்பொழுது தெரிய வரும், ஒவ்வொருவரின் அதியுயர்ந்த பெறுமானம்.

"மனிதன் பெறுமதி மிக்கவனாக இருப்பதற்குரிய காரணம், மனிதத் தன்மைகளோடு, மனித விழுமியங்களைப் பேணி, மனிதனாக வாழக் கூடிய அதி அற்புத ஆற்றல் அவனிடம் இயல்பாகவே நிறையக் காணக்கிடக்கின்றமை தான் என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் அவசியம்"

மனித விழுமியங்களைப் பேணித் தன்னிடமிருந்த அதி அற்புத ஆற்றலை வெளிக்கொணர்ந்து தன் இனத்திற்கு தன் வாழ்வை அர்ப்பணித்த புண்ணிய சீலர் முத்தையா கதிர்காமநாதன் என்றால் மிகையாகாது.

கடந்த சில வருடங்களாக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பணிகளில், "கதிர்" என்னுடன் ஓர் அருமைச் சகோதரராகவே இணைந்து கொண்ட காரணத்தினால் நாளும் பொழுதும் அவருடன் நெருங்கிப் பழகும் பாக்கியத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் எனக்குத்தந்தான். அந்தப் பாக்கியத்தை ஆண்டவன் ஏன் திடீரெனப் பறித்துவிட்டான் என்ற ஏக்கம் இன்னும் என்னை உறுத்திக் கொண்டே இருக்கின்றது.

சகோதரர் "கதிர்" வாழ்விலும் பார்க்க சாவிலும் இன்னும் உயர்ந்து நின்றார் என்ற பிரமை ஒன்று கூட என் சிந்தையில் எழுந்தது. அவர் திடீரென நோய்வாய்ப்பட்டு மறைந்தபோது அவருடன் கருத்து மோதலில் ஈடுபட்டவர்கள் கூட அவரின் இழப்பைப் பொறுக்கமுடியாது கலங்கி இருந்ததைக் கண்டேன். "இந்த மனுஷன் இன்னும் இருந்திருந்தால் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திற்கு எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்" என அவர்கள் அங்கலாய்த்ததும் என் செவிகளில் விழுந்தது.

சிலர் பதவிகளைத் தங்கள் நலனுக்காக - புகழுக்காக - வகித்து வாழ்ந்து வரும் உலகில் தான் இருக்கும் பதவிகளில் பெயருக்கு மட்டும் இருப்பது தவறு முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துச் சேவைபுரிய வேண்டுமென இரவு பகலாக பொறுப்புணர்வுடன் உழைத்த உத்தமர் அவர்.

கொழும்புத் தமிழ் சங்கத்திற்கு அவர் உள்ளார்ந்த அர்ப்பணிப்பைத் தந்திருந்தார். 02.02.2016இல் அவர் மறைந்தார் என்பது பதிவு. ஆனால் உண்மையில் கொழும்புத் தழிழ்ச் சங்கத்தின் விநோதன் கேட்போர் கூடத்தில் 17.01.2016 அன்று காலையில் அவர் மறைந்துவிட்டார். சங்க ஆட்சிக் குழுவிற்கு தலைமை தாங்கிக் கொண்டே எங்கள் கண்முன் மயங்கி விழுந்தார் அப்பொழுதே தமிழச் சங்கத்திலேயே மறைந்துவிட்டார். மேலும் சில நாட்கள் அவர் உடலில் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தாலும் அவரின் மறைவு 17.01.2016 காலையில் கொழும்புத் தமிழ் சங்கத்தில் தான். அதன் பின் இந்த உலகில் அவர் இருந்தது அவருக்கே தெரியாது. தமிழ் சங்கம் மீது ஒரு தனிக் காதல் என நான் அவரைக் கிண்டல் செய்வதும் உண்டு. "வீடு இருக்கிறது, அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலாளர் என்பன எல்லாவற்றையும் கொழும்புத் தமிழ்ச் சங்கக் காதல் காரணமாக" அவர் மறந்து விடுவார்.

தமிழ்ச்சங்கக் கட்டிடத்தின் ஒவ்வொரு தூண்களும் கற்களும் கதிர்காமநாதன் புகழ் பாடும் என அவரின் இறுதி யாத்திரையின் போது பலர் மனம் திறந்து கூறினர். ***கதிர்காமநாதனின் பெயரால் ஒரு நிதியம் நிறுவப்பட்டு அவரின் நினைவாக நல்லதொரு பணித்திட்டத்தைக் கொழும்புத் தமிழ் சங்கம் ஆரம்பிக்க வேண்டும்*** என்பது எனது விதந்துரைப்பு அதற்கு அவரை நேசித்த உள்ளங்கள் யாவும் ஆதரவு தரும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரன் கதிரின் இன்னும் ஓர் அபார திறமையைக் கூறி நிறைவு செய்ய விரும்புகிறேன். காந்தம் போன்று எவரையும் தன்பால் கவர்ந்து இழுக்கும் அன்புள்ளம் அவர். கொழும்புத் தமிழ் சங்கத்தில் எந்தவித பதவியும் ஏற்கமாட்டேன் என இருந்த சிறியேனைச் சங்க ஆட்சிக் குழுவில் தலைவரின் முன் மொழிவில் நியமன உறுப்பினராக நியமிக்க என் சம்மதத்தைப்பெற ஒரு தடவை முயன்று தோல்வி கண்டவர். கடந்த ஆண்டு அன்புப்பிடியாகவே பிடித்துக்கொண்டார் என் மனதை எப்படி உருக்கி என் சம்மதத்தைப் பெற்றார் என்று எனக்கே புரியவில்லை. அது அவரின் சாமர்த்தியம். அப்படி பல சந்தர்ப்பங்களில் தனது நன்மைக்காக அல்ல - பொது நலனுக்காக - மற்றவர்களைத் தன் பால் இழுத்துப் பலகாரியங்களைச் சாதித்த சாதனையாளர் அவர். அவருக்குப் பல நிறுவனங்கள் பொறுப்புகளைத் தந்தன. கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவராகவும், அகில இலங்கை இந்துமாமன்றப் பொதுச் செயலாளராகவும் மட்டுமல்ல உலகசைவப் பேரவை (இலங்கைக் கிளை) செயலாளராகவும், விவேகானந்த சபை உபதலைவராகவும் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை உபதலைவராகவும் இந்தத் தொண்டரின் சேவைகளைப் பெற்று அந்தநிறுவனங்களும் அவரின் உழைப்பால் பயன் பெற்றன.

“யார் எல்லோர் நலனிலும் இன்பம் காண்கிறார்களோ அவர்கள் தான் என்னிடம் வந்து அடைவார்கள்” எனப் பகவத்கீதையில் கிருஷ்ணபரமாத்மா கூறியது போன்று எல்லோர் நலனிலும் இன்பம் கண்ட கதிர் இறைவனைச் சென்று அடைந்து விட்டார் என அவரின் குடும்பத்தினரும் நாங்கள் எல்லோரும் எங்களைத் தேற்றிக் கொள்வோமாக.

*“உலகபொய் வாழ்க்கையையுடலையோம்பற்க;*
*பிறந்தன இறக்கும் ; இறந்தனபிறக்கும்;*
*தோன்றினமறையும் ; மறைந்தனதோன்றும்;*
*பெருத்தனசிறுக்கும் ; சிறுத்தனபெருக்கும்;*
*உணர்ந்தனமறக்கும் : மறந்தனவுணரும்”*

*- பட்டினத்தடிகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத முத்தையா கதிர்காமநாதன்

ஆ.இரகுபதி பாலஶ்ரீதரன்
இலக்கியக்குழுச் செயலாளர

யாழ். நயினாதீவில் பிறந்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்வி பயின்று கொழும்பில் வணிகம் புரிந்துதமிழ்த் தொண்டு சைவத் தொண்டு புரிந்தவர் மறைந்த முத்தையா கதிர்காமநாதன்.

நானும் வெவ்வேறு காலகட்டங்களில் இரண்டுஆண்டுகள் நயினாதீவு மகாவித்தியாலயத்திலும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் கல்விகற்று அமரர் கதிர்காமநாதனுக்குச் சொந்தமான வியாபார ஸ்தலத்திற்கு அருகாமையில் இருந்த இலங்கைவங்கி ஹல்ஸ்டொப் கிளையில் கடமை புரிந்து கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடன் நீண்டகாலத் தொடர்புடையவன்.

அந்த வகையில் கதிருடன் ஏறத்தாழ ஐம்பதாண்டு பரிச்சயம். அண்ணா தம்பி என்று ஆரம்பித்த தொடர்பு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இருவரும் இணைந்த பின்னர் மச்சான் மட்டத்தில் வந்து நின்று மகிழ்வுற்றோம்.

அன்னார் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழையமாணவர் சங்கக் கிளையின் தலைவராக இருந்தகாலகட்டத்தில் தமதுசொந்தச் செலவில் கல்லூரியின் நுழைவாயிலில் அழகான வளைவு ஒன்றை அமைத்து வழங்கினார். அந்தத் தருணத்தில் பழையமாணவர் சங்கச் செயற்குழு அங்கத்தவராக இருந்த நான் அவருக்கு என்னாலியன்ற உதவிகளைச் செய்ததை எண்ணி மகிழ்கின்றேன்.

அதேபோல் 2010-2011 காலகட்டத்தில் அமரர் கதிர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் நான் பொதுச் செயலாளராகவும் திரு.திருச்செல்வன் நிதிச் செயலாளராகவும் கடமைபுரிந்தபோது சங்கநுழைவாயிலில் அழகான வளைவு ஒன்றையும் ஐந்து விருந்தினர் அகங்களையும் அமைத்தமை பற்றி இன்றும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

கடந்தவருடம் இறுதிப் பகுதியில் (11/12/2015,12/12/2015/13/12/2015) மலேசியாவில் வெகு சிறப்பாக நடைபெற்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்தநாள் விழா / தமிழ் மாநாட்டில் திரு.கதிர்காமநாதனும் அவரது துணைவியாரும் நானும் எனது துணைவியாரும் கலந்து கொள்ளத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானித்தோம். அங்கு தமிழ்த் தாய் அறக்கட்டளை, தமிழ்நாடு தமிழ் அமைப்புக்களின் கூட்டமைப்பு 13/2/2016, 14/02/2016 ஆகியதிகதிகளில் இணைந்து நடாத்தும் தமிழ்ப் படைப்பாளர் மாநாட்டில் உலகின் சிறந்ததமிழ் சங்கத்திற்கான விருது எமது கொழும்புத் தமிழ் சங்கத்திற்கு கிடைக்கவுள்ளதாக நல்ல மகிழ்ச்சியான செய்தி கிடைத்தது.

மீண்டும் இலங்கை வந்து ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.கே. பொன்னுத்துரை உட்பட சங்க அங்கத்தவர்கள் சிலருடன் தஞ்சாவூர் மாநாட்டுக்குசெல்லத் தீர்மானித்தோம். ஆனால் விதி யாரை விட்டது?

பெப்ரவரி 12,13 நடைபெறவுள்ள மாநாட்டுக்கு செல்லவேண்டிய ஆயத்தங்களை செய்ய ஆரம்பித்தபோது எனது துணைவியாரின் மருத்துவ சிகிச்சைக்காக ஒருமாதம் முற்கூட்டியே தமிழ் நாடு செல்ல வேண்டி இருந்தது. இதைக் கதிரிடம் தெரிவித்தபோது "நீ முன்னாலே போ! நான் பின்னாலே வாறன் தஞ்சாவூரில் சந்திப்பம்" என்றார். நாங்கள் தைப்பொங்கல் முடித்து அடுத்தநாள் 16/1/2016 தமிழ் நாடு புறப்பட்டோம்.

என்ன துரதிஷ்டம்! 17/1/2016 கொழும்புத் தமிழ் சங்கஆட்சிக்குழுக் கூட்டத்தில் தலைவர் கதிர்காமநாதன் மயங்கி விழுந்ததாகவும் தொடர்ந்து மயக்க நிலையில் இருப்பதாகவும் கேள்விப்பட்டுப் பேரதிர்ச்சி அடைந்தோம். அடுத்து 02/02/2016 அன்று சிவபதமடைந்தார் என்ற செய்தி மீளாக் கவலையில் ஆழ்த்தியது. தமிழ் நாட்டு ஆலயங்களில் கூட நானும் எனதுமனைவியும் கேட்ட பிரார்த்தனைகள் பலனளிக்கவில்லையே என்று வேதனைப்பட்டோம்.

13/02/2016 தஞ்சாவூர் பல்கலைக்கழகக் கரிகாற்சோழன் கலையரங்கிலே மண்டபம் நிறைந்த சனத்திரள் மத்தியில் உலகின் சிறந்ததமிழ் சங்கத்திற்கான விருதை அமரர் தலைவர் கதிர்காமநாதனிற்குப் பதிலாக சங்கத்தின் இலக்கியக் குழுச் செய்லாளர் என்ற ரீதியில் பெற்றபோது கண்ணீர்மல்கி நெஞ்சை அடைத்தது!

எமது குடும்ப நண்பராகத் தமிழ்ச் சங்கத் தலைவராக "கதிரை" நினைக்கும் போதெல்லாம்

"தமிழுக்குத் தொண்டுசெய்தோன் சாவதில்லை" என்றபாரதிதாசன் கூற்றும்

பாரதப் பிரதமர் நேரு மறைந்தபோது

"சாவே உனக்கொரு சாவுவந்து சேராதோ

தீயே உன்னை ஒருநாள் தீவைத்துப் பார்க்கோமோ"

என்ற கண்ணதாசனின் வரிகளும் நினைவுக்கு வருவதுடன் கண்கள் கலங்கி நெஞ்சம் கனப்பது தவிர்க்க முடியாததாகிறது.

வாழ்க கதிர்காமநாதன் புகழ்!!!!!!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருயிர் தோழன் கதிர்......

ந. கருணைஆனந்தன்
தலைவர் - நாவலர் நற்பணி மன்றம்

*"தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை*
*தந்தை சொல் மிக்க மந்திரமில்லை*
*ஆருயிரை போன்றது நட்புத்தானே"*

நாம் செய்யும் நல்ல காரியங்களைப் பாராட்ட மறுக்கும் இச் சமூகத்தில், தவறான விடயங்களைச் சுட்டிக்காட்டி நல்வழிப் படுத்துபவன்தான் உற்ற நண்பனாகிறான். அவ்வாறான நண்பன் எல்லோருக்கும் கிடைப்பது அரிதே!

*'நகுதற் பொருட்டன்றுநட்டல் மிகுதிக்கண்*
*மேற்சென்று இடித்தற் பொருட்டு"*

என்பது வள்ளுவன் கூற்று.

அமரத்துவம் அடைந்த என் ஆருயிர் தோழன் கலாநிதி கதிர்காமநாதனின் நட்பும், இவ்வாறான ஒரு உணர்வை அவர் மறைந்ததன் பின்னரே என் மனதில் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. எவர் தூற்றினாலும், ஏற்றினாலும் மனம் தளர் வடையாது, காரியங்களைச் சிறப்பாய் முடிக்கும் ஆற்றலைக் கொண்ட இவர், நான் முடியாது என மலைத்து நிற்கும் போது என்னை தேடிவந்து அன்போடும், ஆதரவோடும் அரவணைத்து, வழிகாட்டி வெற்றிப் பாதையில் இட்டுச் சென்ற சந்தர்ப்பங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல பல, பல அவற்றுள் சிலவற்றை நான் உங்களோடு மீட்டுப்பார்க்க விழைகிறேன்.

எமது பாடசாலையான ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நூற்றாண்டு நினைவு முத்திரை வெளியீட்டு விழாவை நடாத்த, நான் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக செயற்பட்டபோது கதிர் செயலாளராக அரும்பணியாற்றி செயற்பட்டமையை எவரும் மறக்கமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமன்றி அவருக்கும் எனக்குமிடையிலான நெருக்கமான உறவும் நட்பும் மேலோங்கிய நிலையில், இருவரும் இணைந்து "கொழும்புத் தமிழ்ச் சங்கம்" நூற்றாண்டு காணும் முன்னரே 70 ஆவது ஆண்டில் ஓர் முத்திரையை வெளியிட இணைந்து பணியாற்றியமை ஓர் அருஞ்சாதனையாகும்.

அடுத்ததாக தமிழ்ச் சங்கத்தின் பார்வையாளராக இருந்த என்னை பங்காளியாக்கி "சங்கவிருந்தினர் அகம்" ஒன்றை அன்பளிப்புச் செய்வதற்கு வழிகாட்டியாக இருந்ததுடன், அதற்கு "நாவலர் அகம்" என்ற பெயரையும் வைத்து மகிழவைத்தார்.

அதேநேரம் இலங்கை பூராவும் ஆறுமுகநாவலரது சிலையினை நிறுவுவதற்கு நாவலர் நற்பணிமன்றத்தின் ஆலோசனைக் குழுவினூடாக இவர் ஆற்றிய அறிவுரைகளும், ஊக்குவிப்புக்களும் எண்ணில் அடங்காதவையாகும். நாவலரது சிலையினை வடிவமைக்க நான் சிறந்த சிற்பாச்சாரியாரைத் தேடிக் கொண்டிருந்தபோது, நண்பர் கதிர், சிறந்தவொரு சிறப்பாச்சாரியரைத் தேடிக் கொடுத்தது மட்டுமல்லாமல், கொழும்பிலும் ஏனைய வெளிமாவட்டங்களிலும் உள்ள பாடசாலைகளையும் பாடசாலை அதிபர்களையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

குறிப்பாக உடப்பு உயர் பாடசாலை நிர்வாகக் குழுவினர் வீரசொக்கனையும், நீர்கொழும்பு விஜயரத்தினம் கல்லூரி அதிபர் போன்றோரையும் அறிமுகம் செய்துவைத்தார். மற்றவரின் குணம், நலம் பேசுவார்; ஆனால் ஒருபோதும் குற்றம் காணார்.

இறுதியாக நடந்த நாவலர் விழாவை சிறப்பாகச் செய்து முடிக்கவும் சந்தர்ப்பம் அளித்தார். பேராசியர் கா.பொ.இரத்தினம் அவர்களின் நினைவுமலர், ஆறுமுகநாவலர் ஒரு பன்முகநோக்கு, மற்றும் ஆறுமுகநாவலர் பற்றிய ஒரு ஆங்கிலப் புத்தகத்தையும் வெளியிடுவதற்கு இவர் அளித்த ஆக்கமும், ஊக்கமும் என்றும் நினைவை விட்டு அகலாதவை.

இதேபோன்று திருக்குறள் மாநாடு, மற்றும் சமயவிழாக்களிலும் ஏதாவது பணிகளை நான் ஆற்றுவதற்கு இடம் தந்து,என் முன்னேற்றப் பாதையில் அணையாவிளக்காய் வழிகாட்டி தமிழ்ச்சங்கத்தின் ஒரு முக்கியஸ்தராக என்னை மாற்றி, இன்று முன்னணியில் விட்டுச் சென்றார்.

இவர் போன்ற ஒரு நண்பனை நான் இழந்தது மட்டுமின்றி என் வாழ்வில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகவே நான் கருதிநிற்கிறேன். இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்தப்படி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புறு மைந்தன்

ப.க.மகாதேவா
உறுப்புரிமைச் செயலாளர

மன்மத ஆண்டு மனங்குளிரும் தைத்திங்கள்
நின்மலன் பாதம் நினைந்து - இன்முகத்தோன்
யாரும் விரும்பும் கதிர்காமன் கைலை
சேரும்படிசென்றா னறி

தமிழர் திருநாளில் தமிழ்ச்சங்க முன்றலில்
தூய்மை ஆக்கிய ஊரரிசிப் பொங்கலிட்டு
அமுதாகப் படைத்திட்டோம் அருணனுக்கு நன்றியுடன்
எமதான தமிழ்ப்பணி இனிதாக வளர்ந்திட
உமதான பணியினைத் தொடருங்க ளெனச்சொல்ல
உரித்தான மண்டபத்தில் உன்னதமாம் கவிபடைத்து
தமதான தமிழ்ப் பணியைத் தரமாகச் செய்திட்ட
தமிழ்ச் சங்கத் தொண்டரணித் தலைவருடன் மகிழ்ந்ததுவே

நன்றாக விருந்தது தமிழ்ச்சங்கப் பொங்கலென
நாமொன்றாய்க் கூடி நலமுடன் விருந்துண்டு
மன்றுக்குத் தலைமையேற்று மாலை மயங்கிவர
மங்கையரின் நடனத்தில் மக்கள் மகிழ்ந்திருக்க
குன்றாத பொருளுடனே கோத்திட்ட கவியனைத்தும்
கோன்மை யுற் றிருந்ததென நவின்றோ ரிரண்டுநாள்
சென்றாலும் தித்தித்த கவியரங்கை வாழ்த்திய நீ
என்றாயினும் வருவாயென எதிர்பார்த் தேமாந்தோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துச் சிப்பியாய் முகிழ்த்து நீ மூச்சுவிட
கத்தும் கடலலையின் கருவறைக்குச் சென்றாயோ
நித்தம் நின்குரல் கேட்டிடுமெம் சங்கத்தில்
சத்தம் ஓய்ந்து சந்தடியும் குறைந்ததுவே

சொல்லும் பொருளுமென நடமாடித் திரிந்தவுனை
நில்லும் எனவழைத்த நீசனவன் யார்தானோ
கல்லும் கசிந்துருகும் கனிவான பேச்சதனால்
வெல்லும் பலர் நெஞ்சம் வேண்டிடுமா சான்றதற்கு

மணிபல்லவத்தின் மாண்புமிகு மைந்த னென
அணிவகுத்து நின்றவுன்னை யாரழைக்க நீ சென்றாய்
பிணிமுக மின்றிப் பெருவாழ் வியற்று வேளை
துணிவுடனே அழைத்திட்ட அம்பிகையின் அடிபணிவோம்

அன்பருக் கன்பனாய் ஆறுதல் நீயளித்தே
உன்பெரு மனத்தினால் ஊரவர் போற்றிட
முன்பொரு வளைவினை முற்றத்தில் அமைத்திட
தன்பெரு வடிவினைத் தமிழ்ச்சங்கம் பெற்றதுவே

மாதாந்தக் கூட்டங்களில் மலர்ந்த முகத்துடனே
வேதாந்தக் கருத்துக்களை விதைத்துப் பண்படுத்தி
நாதாந்த வித்தகனாய் நம்மிடையே நீ மிளிர்ந்து
பேதங்கள் மறந்தெம்மைப் பிணைத்திட்ட பெருந்தலைவ

மலேசியா மாநாடு சென்றுவந்த வேளை
உலகத் தமிழ்ச்சங்க மனைத்தினுளும் மேலாக
சிலாகித்துப் பேசப்படுவ தமது சங்கமெனப்
பலராலும் போற்றப்பட்ட செய்தியோடு நீர்வந்தீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைபேச முடியாத தஞ்சாவூர் சான்றிதழை
தலைவனாய்ச் சென்று பெற்றிடத் தானிருந்தாய்
கலையாத கனவு நினைவாக வருதல்கண்டு
சிலையாக நின்று நீ சிரிப்பதுவும் தெரியுதையா

மற்றவர் மனதில் வாழும்வரை வாழ்க்கையுண்டு
உற்றாரைப் பிரிந்து போம்வரைதான் வாழ்க்கையில்லை
கற்றவர் மனதில் கருத்தினை விதைத்து வளமாக்கி
நற்றவத்தோர் நலம்பெற நாளும் வாழ்ந்தீர்கள்

வாழும் வழியில் வாழ்ந்து நீ சென்றாய்
நாளும் பொழுதும் நலம்பல செய்தாய்
சூழும் துயரம் எவையும் தொடரா
ஆளும் அம்பிகை அடியினைப் பணிவோமே

கலையாத கல்வி குறையாது பெற்றிட
நிலையாக வீடு கொழும்பில் இல்லாதோர்
விலையாக வீடு வாங்க முடியாதோர்
தலைவனை இழந்து துயருற்று
மலைபோல துயரங்கள் மடிமீது சுமந்து
அலைமோதும் ஆசைகள் அகத்தினில் அடக்கி
தலைநகர் வந்து தடுமாறும் மக்கள்
சிலைபோல நின்று சிந்திக்கும் வேளை
தலைவாசல் வரைவந்து தமிழ்ச்சங்கம் வரவேற்று
விருத்தினர் விடுதியில் விடியும்வரை தங்கவைத்து
மருந்துக்கு வந்தோர் மாத்திரைகள் பெற்றுவர
வருந்துயரம் மாற்றிட வழிதேடி வந்தவர்கள்
இருந்து இளைப்பாற இடம் கொடுத்துக்-கைகொடுக்க
விருந்தினர் விடுதி விண்முட்ட அமைக்கவென
அரும்பாடு பட்ட அமரர் கதிர்காமர்
பெருந்துயரமுற்று பெரியோர் துணைக் கொண்டு
அரும்பெரும் பெரியோர்கள் அவர்தம் நினைவாக
விருந்தினர் விடுதி மென்மேலும் வளர்ந்தது
சிறந்தது அத்தனையும் சீராளன் தயவாலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் நினைவுகள்

வசந்தி தயாபரன்

மனிதவாழ்வின் மகத்துவம் சொல்லித் தெரியவேண்டியதில்லை. சின்னாள் உலகவாழ்வில் சிக்கல்களைக் கண்டு சிதறு தேங்காய் போல் நொருங்கிப் போவோர் பலர். அவற்றைத் திடமுடன் எதிர்கொண்டு, வாழ்ந்துகாட்டுவோர் சிலர். அதற்கும் ஒரு படி மேலே சென்று தன்னுடன் தான் வாழும் சமுதாயமும் செழிப்புறத் தன்னாலான சேவைகளைச் செய்வோர் இன்னும் மிகச் சிலர். அத்தகு பொதுநலச் சேவையில் ஈடுபட்டு உழைப்போருக்கு சில அடிப்படைப் பண்புகள் தேவைப்படுகின்றன். அவ்வாறான பண்புகள் கொண்டதொரு பொதுநலத் தொண்டாளரே, அமரர் மு.கதிர்காமநாதன்.

வாழ்வின் நீரோட்டத்தில் அள்ளுண்டு, அடியுண்டு அவற்றைத் தாண்டி வருகையில் நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள் ஏராளம். சந்திக்கும் மனிதர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள் பற்பல. இந்தத் தகைமைகளும் உரமும் பெற்றதான ஓர் உள்ளம், தனது வாழ்க்கையின் ஒரு பகுதியினை, சமூகத்திற்குப் பயனுறும் வகையில் அர்ப்பணிக்கத் தயாராகின்றது. இப்பண்புகள் எல்லாவற்றையும் வாழ்க்கைப் பயணத்தின் பல்வேறு காலகட்டங்களில் பெற்றும் தொகுத்தும் சேமித்துக் கொண்ட ஒருவரே, அமரர் மு.கதிர்காமநாதன் அவர்கள்.

சில மனிதர்களைப் பார்த்ததுமே, இவர் பழகுதற்கு இனியவர் என்ற இதமான உணர்வு ஏற்படுவதுண்டு. அமரரின் முகத்திற்கு அத்தகு சிறப்பான தன்மை இருந்தது. அன்பு நிறைந்த சிரிப்பு, கனிவான பார்வை என்பன அவரது வரவேற்பின் கட்டியங்கள். அவை, அவரது ஆளுமையின் ஒரு கூறு மட்டுமே. தலைமைத்துவப் பண்பு, நெருக்கடியான சூழ்நிலைகளைச் செவ்வனே கையாளும் திறன் என்பனவும் அதற்கு எம்மட்டும் குறைந்தனவல்ல.

எனினும், மதிநுட்பம் நிறைந்த அம்மனிதரினுள் இருந்த விசேடமான அளவுகோலோ, மனிதர்களை அளவிடும் நுண்ணாற்றல் கொண்டது. ஒருவரின் பலம், பலவீனம் இரண்டையும் அதன் துணையால் அவர் அளந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தான், தன்னைச் சூழ்ந்த மனிதர்கள் குறித்த சரியான கணிப்பீடு அவரிடமிருந்தது. அவர் எவரது ஆற்றலையும் குறைத்து மதிப்பிட்டவரல்லர். அதேவேளை, எவரது காய்நகர்த்தலையும் புரிந்து கொள்ளாதவருமல்லர். உள்ளுணர்வுடன் கூடிய எடைபோடும் திறன், அவரது வலுவான படைக்கலன்.

கடந்த பல வருடங்களாக, கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அவருடைய தலைமைத்துவத்தின் கீழ் சங்கப் பணிகளில் பங்கேற்றமை, எனக்குக் கிடைத்ததோர் நற்பேறு. எமது சிற்றறிவுக்கு எட்டிய கருத்துக்களைக் கூறுகையில், அவற்றைக் கூர்ந்து செவிமடுத்ததும், முக்கிய பொறுப்புக்களை ஒப்படைத்து வழிநடத்தியதும் என் மனதில் ஆழப்பதிந்து விட்ட நினைவுகள்.

எழுத்துப் பிரதிகள் தேர்வு, திட்டவரைவுகள், நிகழ்ச்சி வடிவமைப்பு என்பன தொடர்பில் ஒளிவுமறைவற்ற கருத்துக் கூறுமாறு கேட்பதும், நான் தெரிவிப்பதில் பொருத்தமானவற்றுக்குச் செயல் வடிவம் கொடுப்பதும் அவரது தன்முனைப்பற்ற இயல்பைச் சுட்டுவன. பணியின் நிறைவில் பாராட்டோ நன்றியோ நிச்சயம் வந்துசேரும், உற்சாகமூட்டும்.

இவ்வாண்டின் முற்பகுதியில் 'தமிழோடிசைபாடல்' நிகழ்ச்சிகுறித்த செயற்பாடுகளில் அமரருடன் பணியாற்றியகாட்சி கண்முன்னே நிழற்படமாக விரிகையிலேயே, அவர் கண்மூடிவிட்ட துயரமும் நடந்தேறி விட்டது. உரையாடல்களின்போது, '...என்னம்மா சொன்னீங்கள்' என்று மென்மையாகப் பேசும் அவரது குரல், நேற்றுத்தான் கேட்டதுபோல் காதில் ஒலிக்கின்றது.

தனது வாழ்க்கைத் துணைவியார் பற்றி உயர்வான மதிப்பீட்டை அவர் கொண்டிருந்தார். தன்னை முழுமையாகப் புரிந்துகொண்டு, தன்னுடன் ஒருமித்து நடக்கும் இல்லாளோடு அவரது இல்லறம் செழித்திருந்தது. 'செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்' என்பதற்கிணங்க, அவர் தனது சுற்றத்தையும் அணைத்து வாழ்கின்றதொரு இல்வாழ்க்கையை வகுத்துக் கொண்டார்.

அமரர் மு.கதிர்காமநாதன் கால்கோளிட்ட பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு, வினைத்திறனுடன் நிறைவேற்றப்படல் வேண்டும். அதுவே, மறைந்ததன் பின்னும் எம் மனங்களில் அவர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்பதற்கான சான்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமநாதனுடன் - மறக்கமுடியாத சில தருணங்கள்!

தி. ஞானசேகரன்
ஆட்சிக்குழு உறுப்பினர

2001 ஜனவரி மாதத்தில் ஒரு நாள் அதிகாலை 6 மணி.

எனது இல்லத்தின் கதவைத் தட்டினார் ஒருவர். அதற்குச் சிலநாட்களுக்கு முன்னர்தான் நான் கொழும்பு வாசியாகியிருந்தேன்.

எங்கேயோ பார்த்த முகம்! ஆனால் சட்டென்று நினைவுக்கு வரவில்லை. இந்த அதிகாலைப் பொழுதில் இவர் எதற்காக வந்திருக்கக் கூடும் என்று எண்ணியவாறு கதவைத் திறந்தேன்.

'டொக்டர், நான் கதிர்காமநாதன், ஞானம் சஞ்சிகைக்குச் சந்தா செலுத்த வந்தேன்" என்றார்.

'அதிகாலையில் வந்திருக்கிறீர்கள். உள்ளே வாருங்கள்.. உட்கார்ந்து பேசலாம்.."

'இல்லையில்லை.. நடைப்பயிற்சியின்போது இங்கு வந்தேன்.. இன்னொரு தடவை ஆறுதலாக வருகிறேன்."

இப்படி அவர் கூறியபோது அவரது வலது கை எனது வலது கையைப் பற்றிக் கொண்டது. இடது கை எனது தோளில் படர்ந்தது. புன்னகை அவரது முகத்தில் நிறைந்தது. அந்த ஆகர்ஷம் என்னைப் பற்றிக்கொண்டது.

அதன் பின்னர் அவர் என்னைச் சந்திக்கும் வேளைகளிலெல்லாம் இப்படித் தான் ஒரு அன்பு நெருக்கத்துடன் கதைப்பார். என்னுடன் மட்டுமல்ல அவர் எல்லோருடனும் அப்படித்தான்! அது அவரது சுபாவம்! அவருடன் பழகிய வர்களுக்கு இது நன்கு தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006 ஜனவரி மாதத்தில் நாங்கள் அவுஸ்திரேலியாவில் சந்தித்துக் கொண்டோம். அவ்வாண்டு ஜனவரி மாதத்தில் சிட்னிமாநகரில் 10ஆவது உலக சைவமாநாடு நடைபெற்றது.

உலக சைவப்பேரவையின் இலங்கைக் கிளைத் தலைவராக திரு. கா. தயாபரன் பணியாற்றினார் . திரு. மு. கதிர்காமநாதன் இணைப்பாளராக இயங்கினார். இலங்கையிலிருந்து 20க்கும் மேற்பட்டோர் அந்த மாநாட்டில் பங்குபற்றினர். இங்கிருந்து கட்டுரைகள் சமர்ப்பித்தவர்களில் கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களும் எனது மனைவி ஞானலட்சுமியும் மாநாட்டு அரங்கில் கட்டுரைகள் வாசித்தார்கள்.

இந்த மாநாட்டின் நிறைவில் சுற்றுலா ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இணைப்பாளராகச் செயலாற்றிக் கொண்டிருந்த கதிர்காமநாதன் சகல ஒழுங்குகளையும் திறம்படச் செய்து அந்த மாநாடு வெற்றிகரமாக நிறைவேற இலங்கைப் பேராளர்களின் சார்பில் பங்களிப்புச் செய்தார்.

தொடர்ந்து சிட்னி முருகன் ஆலய மண்டபத்தில் எனது மனைவி எழுதிய 'மங்கலப் பொருட்களின் மகத்துவம்" என்ற நூல் வெளியீட்டுவிழா இடம்பெற்றது.

சிறப்புப் பேச்சாளராக கம்பவாரிதி பங்குபற்றினார்.

அந்நிய மண்ணில் அந்நூல் வெளியீட்டுவிழா சிறப்பாக நடந்தேற முன்னின்று உழைத்தவர்களில் திரு. கதிர்காமநாதன் முக்கியமானவர்.

2011 ஜனவரி 6ஆம் திகதி முதல் 9 ஆம் திகதிவரை கொழும்பில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு இடம்பெற்றது. அந்த மாநாட்டின் இலங்கைக் கிளையின் தலைவராகவும் இணைப்பாளராகவும் இருந்து மாநாட்டை நடத்துவதற்கு உரிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வேளையில் நான் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நூலகச் செயலாளராக இருந்தது பெருவாய்ப்பாய் அமைந்தது.

கொழும்புத் தமிழ்ச்சங்க செயற்குழுவின் அத்தனை பேருடைய உதவியையும் பெற்று தமிழ்ச்சங்க மண்டபங்களை விழாமண்டபங்களாகப் பாவித்து அம்மாநாட்டை மிகவும் சிறப்பாக நடாத்தினோம். அவ்வேளையில் திரு.மு. கதிர்காமநாதன் தலைவராக இருந்தார். சங்கத்தின் சகல வளங்களையும் அந்த மாநாட்டுக்குப் பயன்படுத்த அவர் அனுமதி வழங்கினார். அதற்கப்பாலும் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த மாநாட்டின் வெற்றிக்கு உதவி செய்தார். குறிப்பாக அந்த மாநாட்டில் பங்குபற்றிய எண்பதுக்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பேராளர்கள் தங்குவதற்கு எவ்வித முற்கொடுப்பனவுகளும் இன்றி ஹோட்டல் களை ஒழுங்கு செய்தார்.

அதே காலப்பகுதியில் நான் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகச் செயலாளர் என்ற நிலையில் நூலகச் செயற்பாடுகளைக் கணினி மயப்படுத்த எண்ணி. கணினிப் பொறியியலாளரான எனது மகன் பாலச்சந்திரனின் உதவியையும் பெற்று அப்பணியை ஆரம்பித்தேன். அதற்காக ஒரு கணினியையும் தமிழ்ச் சங்கத்துக்கு அன்பளிப்புச் செய்தேன். அவ்வேளையில் ஆதரவு தந்து மிகவும் உற்சாகப்படுத்தி ஊக்கமளித்தவர் கதிர்காமநாதன் அவர்கள்.

2012ஆம் ஆண்டு கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது 70 ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு அவ்வருடம் ஜூன் 2,3,4 ஆம் திகதிகளில் உலகத் தமிழ் மாநாடு ஒன்றை நடத்தியது. "தமிழ் இலக்கியமும் சமூகமும் - இன்றும் நாளையும்" என்ற தொனிப்பொருளில் நடந்த இந்த மாநாடு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மு.கதிர்காமநாதன் தலைமையில் ஆட்சிக் குழுவினரின் ஒத்துழைப்புடன் இடம்பெற்றது. இலக்கியச் செயலாளராக நான் பணியாற்றிய அம் மாநாடு மிகவும் சிறப்பாக நடந்தேறியது. அவ்வேளையில் மு.கதிர்காமநாதன் எனக்குத் தந்த ஒத்துழைப்பு மிகப்பெரியது. என்னளவில் சில தீர்மானங்களையும் முடிவுகளையும் எடுப்பதற்கு அவர் அனுமதி வழங்கியிருந்தார்.

கொழும்புத் தமிழ்ச்சங்கம் உலகளாவிய ரீதியில் முதல்முதலாக நடத்திய மாநாடு இதுவாகும்.

திரு. மு.கதிர்காமநாதன் அமரராவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் இடம்பெற்ற நூலகச் செயற்குழுக் கூட்டமொன்றில் என்னிடம் பகிரங்கமாக ஒரு வேண்டு கோளை விடுத்தார். 'நூலக கணினி மயமாக்கற் செயற்பாடுகளை நீங்கள்தான் ஆரம்பித்தீர்கள். அதனைத் துரிதமாக முடிக்க நடவடிக்கை எடுங்கள்" என்பதுதான் அவர் என்னிடம் பேசிய கடைசி வார்த்தைகளாக அமைந்து விட்டன.

தமிழ்ச் சங்கம் சிறந்தோங்க வேண்டும் என அல்லும் பகலும் சிந்தித்துச் செயலாற்றிய ஒரு பெருமகன் திரு. கதிர்காமநாதன்.

அவரது பேச்சு ஓய்ந்து போனதும் தமிழ்ச் சங்கத்திலேதான்!
அவரது இடத்தை நிரப்புவது மிகக் கடினம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையில் கண்ணான கதிர்காமநாதன்

பத்மா சோமகாந்தன்

இவ்வாண்டு தைமாதம் 15ஆந் திகதியே பொங்கல் தினமாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் கழிந்து மறுநாள்விட்டு அதற்கடுத்தநாள் வழமைபோல் 3ம் ஞாயிறு நாளன்று எமது ஆட்சிக்குழுக் கூட்டம் காலை 10.00 மணியளவில் ஆரம்பமானது. தமிழ்வாழ்த்துடன் தொடங்கிய கூட்டத்தின் தொடக்க நிகழ்ச்சியாகத் தலைவரின் தலைமையுரை வெகுசிறப்பாக இடம்பெற்றது.

இவ்வாண்டு நடைபெற்ற நிகழ்ச்சிகள் யாவும் யாவருமே பாராட்டக்கூடிய வகையில் தரம்வாய்ந்ததாக அமைந்திருந்தன எனவும் பொங்கல்விழாக் கவியரங்கின் போதுதான் தமிழ்ச்சங்கத்திலும் ஆற்றல் மிக்க கவிஞர்கள் இருக்கிறார்கள் என்ற உண்மையைக் காணமுடிந்ததெனவும், தான் மலாயா எழுத்தாளர் மாநாட்டிற்குச் சென்றிருந்தபோதே உலகில் இயங்கும் சகல தமிழ்ச்சங்கங்களின் மத்தியிலும் கொழும்பு தமிழ்ச்சங்கமே குறிப்பிடக்கூடிய மிகச்சிறந்த சங்கமென்ற பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. இதற்கான விபரத்தைப் பின்னர் தருவேன். திரு கந்தசாமி அவர்களுக்கு பொருளாதாரத்துறையில் கௌரவமும் பத்மா. சோமகாந்தன் அம்மாவிற்கும் தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் "சிவத்தமிழ்ச் செல்வி" விருதும் கிடைத்துள்ளது. இதனால் எமக்கெல்லாம் பெருமையும் மகிழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. அதேவளை சமீபத்தில் எம்மோடு மிகநெருங்கிய இரு பிரபலங்கள் ஒருவர் 90 வயதான திருமதி. சங்கரப்பிள்ளை, மற்றவர் பிரபல மிருதங்க வித்துவான் ஐம்புநாதன் ஆகியோருடைய மறைவிற்காக இரு நிமிடங்கள் அவர்களது ஆத்மா சாந்திடையப் பிரார்த்திப்போம் என்ற விடயங்களெல்லாம் வெகு கச்சிதமாக உள்ளுணர்வோடு மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் பேசி கேட்டிருந்தோர் மனங்களிலெல்லாம் தன் கருத்தாழ்ந்த உரைகளைப் பதிய வைத்....... தலைவர் மெதுவாகப் பின்னடியாகச் சாய்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் தன் மடல்களை மெதுமெதுவாக மூடிக்கொள்ளவும் அருகாமை யிலிருந்த பொருளாளரும் செயலாளரும் மற்றும் ஏனையோரும் அதிவேகமாக விரைந்து அவரைப் பிடித்துத் தூக்கிக் கொண்டனர்.

மின்வேகத்தில் தலைவர் கதிர்காமநாதன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. சூழவிருந்த யாவரது மனநிலையும் அதிர்ச்சியில் உறைந்துபோய் ஐயனே! அப்பனே ஏன் இப்படி? என்னதான் நடக்கப்போகிறதோ? என்று ஏக்கத்தில் விழிகள் பிதுங்க நாத்தடுமாறப் பேச முடியாமல் ஸ்தம்பிதநிலையில் தம்நிலை தளர்ந்து வேதனையையே இறுக அணைத்துக்கொண்டனர்.

இப்படியொரு நிலையில் எல்லோருடய எண்ணங்களையும் கனிவுறச் செய்து பாரிய இடைவெளியை எம்மிடையே ஏற்படுத்தி சுமார் 16 நாட்களின் பின் இவ்வுலக வாழ்வை நீத்த பெருமகனே கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் தலைமையை ஏற்றுச் சிறப்புற நடாத்திக்கொண்டிருந்த திரு.முத்தையா கதிர்காமநாதன்.

நண்பர்கள், உறவினர்கள் கற்றோருடன் மட்டுமல்லச் சாதாரண கீழ்மட்ட மக்களுடனும் இனிமையாகவும் அன்பாகவும் உறவாடும் சுபாவம் மிக்க கதிர்காமநாதன் தான் எடுத்த காரியத்தை சிறப்புற நடாத்தி முடிப்பதிலும் மிகுந்த ஈடுபாடுகொண்டு உழைக்கும் பான்மைமிக்கவர்.

இவருடைய செயற்பாடுகளைக் கணிப்பிடும் போதெல்லாம் வள்ளுவனின்.

*"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்*
*நீங்கா நிலனாள் பவர்க்கு"* -

என்ற குறள்தான் நினைவில் தட்டுப்படும்.

ஒரு நாட்டை ஆளும் தலைவனுக்கு அல்லது பல்லோர் சேர்ந்த அமைப்புகளின் தலைமைப்பொறுப்பை ஏற்றுப் பல சட்டதிட்டங்களை ஏற்படுத்திச் சிறப்புற அவற்றை வெற்றிகரமாகக் கையாள்வதற்கு சோம்பலின்றிக் காலந்தாழ்த்தாது பல்வேறுவகையிலும் ஆற்றலையும் அறிவினையும் பெற்று வெகு துணிச்சலோடு அவற்றை முன்னெடுத்துச் செல்வது தலைமைத் துவத்திற்கான சிறந்த பண்பு எனக் குறிப்பிட்டுள்ளார். திரு.கதிர்காமநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்கல்வி கற்றுப் பல பட்டங்களுக்கும் உரித்துடையவராகத் தன்னை ஆளாக்கிக் கொள்ளாவிடினும் அனுபவ அறிவாலும் பட்டறிவாலும் பலவற்றைச் செயற்படுத்திய திறமை மிக்கவர், என்ற ரீதியிலே வள்ளுவர் பெருமான் குறிப்பிட்டுள்ள இம்மூன்று அம்சங்களும் இவருக்குப் பொருத்தமாகவே அமைந்துள்ளன என்பதைத் தமிழ்ச்சங்கத்தின் வரலாற்றிலே இவரது காலகட்டத்தில் இடம்பெற்ற விழாக்கள், கருத்தரங்குள், ஏனைய நிகழ்ச்சிகள், கட்டிட விஸ்தரிப்புக்கள் எனப் பலவற்றை இங்கு நாம் சுட்டிக்காட்டமுடியும்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைமை என்ற பொறுப்புமிக்க பதவியை இவர் ஏற்றுக் கொண்டிருந்த வேளையிலே இலங்கை இந்துமாமன்றத்தின் செயலாளராகவும் அகில உலக சைவப்பேரவையின் இலங்கைக் கிளையின் செயலாளராகவும் இவர் பணிபுரிந்திருந்தமை இவருடைய பாரிய செயற்பாடுகளின் தன்மையையும் எமக்கு விளக்குகின்றது.

"மலையே வந்தாலும் தலையே சும" என்பது போல சகல காரியங்களையும் வெகு சுறுசுறுப்பாகவும், நுட்பமாகவும் பின்தங்காது நிறைவேற்றி முடித்த இச்செயல் வீரனை இன்று இலங்கையின் குறிப்பிடக்கூடிய பலபெரும் அமைப்புக்களும் இழந்து வேதனையுறுவது தவிர்க்க முடியாததே! அவரது ஆன்மா சாந்தியடையட்டும்!

இயற்கை வழி இறைவன் வழி யாவுமே சுமுகமாக நிறைவேற பிரார்த்திப் போம் முயற்சிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பணிச் செல்வர் முத்தையா கதிர்காமநாதன்

**பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன**

தமிழ்ப்பற்றும், தான் பிறந்த சமயத்திற்றளராவுறுதியும் கொண்டு வாழ்வ தென்பது குறிக்கோளாகவுடையவர் தொண்டன் மு. கதிர்காமநாதன் அவர்கள். அவரது உலகவாழ்வு பிறருக்கு முன்னுதாரணம். 'பிறவி' எடுக்கும் மனிதவுடல் மனம், உயிர் என்ற கருவிகளையும் கொண்டுள்ளது. விருப்பமும், இயல்பும், எண்ணங்களும் தொழிற்படும் விதமே ஒருவருடைய புகழாக எஞ்சுவது. உபகாரி உறுதுணை என்ற பெயர் எடுப்பது மிகமிகக் கடினமானது; முயற்சியோடு தொடர்புடையது.

இன்று சமுதாயத்திலிருந்து – உறவுகளினது சம்பந்தத்திலிருந்து அந்நியப்பட்டு ஒதுங்கித் தூரவிலகி இருப்பதையே மக்கள் மேதாவிகள் பலரும் ஒப்ப விரும்புகின்றனர். இவ்விழுந்த – கேவலமிக்க குணத்தினராக வாழும் மனித நரர்களுக்கு மத்தியில் குணக்குன்றென நிமிர்ந்து நிற்பவர் கலாநிதி கதிர்காமநாதன் அவர்கள். சேவையே வாழ்வாகக் கொண்ட சீவன். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன். என்றும் புன்சிரிப்புடன், நளினமான நடையுடையைக் கொண்ட இன்பன். எதிரியையும் அரவணைக்கும் நண்பன். துன்பத்திலும் துவளாதவர். பேரின்ப நிலையினன். எப்போதும் மகிழ்ச்சியை உதிர்க்கும் ஆனந்தாதீதன். சமூகத்தின் வாழ்வை, தாம் பிறந்த சமயத்தின் உண்மையை அஞ்சாது துணிந்து முன்னிறுத்தி இன்சொல் பேசி மகிழ்வுணர்ச்சியுடன் அளவளாவி நயத்தக்க நாகரிகத்துடன் இயங்கும் தமிழன்பன்.

நயத்தக்க நாகரிகம் என்பது தான் என்ன என்பதனைக் கற்பதற்கு அன்பர் கதிர்காமநாதன் இன்றில்லை. பலரும் அங்கலாய்க்கின்றனர்: ஏங்கித் திரிகின்றனர். கதிர்காமநாதன் தமது உழைப்பை, தமது நேரத்தை, தமது பணத்தை, தமது பண்பை விரிக்க விசாலிக்கப் பயன்படுத்தி வாழ்ந்த பெருந்தகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூற்றுவோர் பகைவர் எதிரிகள் பற்றிப் பேசாத சீலம் மிக்கவர் நல்லதையே எண்ணி நல்லதையே செய்யும் நல்செயலாண்மை கொண்டவர். பிறரது ஏவலையும், கட்டளையையும் கூற்றுக்களையும் தமது செவிக்குள்ளே கிரகித்துக்கொண்டு வேண்டிய செயற்பாட்டிலே துணிந்து இறங்கிவிடுபவர்.

தனிமனிதன் குடும்பம், உறவு என்ற தளைகளிலே கட்டுண்டவன். ஆசாபாசங்களிலே திளைப்பவன். பற்றுப் பந்தங்களில் உழல்பவன். இன்ப துன்பங்களிலே கலங்குபவன். இவையெல்லாம் கலாநிதி கதிர்காமநாதனிடம் கிடையாது. 'நாமார்க்கும் குடியல்லோம்" என்ற கொள்கையுடையவர். 'தீதும் நன்றும் பிறர்தரவாரா' என்ற புறநானூற்றுத் திடசித்தங் கொண்டவர்.

மொழியுணர்ச்சி மிக்க கதிர்காமநாதன் அவர்கள் திடமான முறையிலே அதன் வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்கும் தம்மாலான பங்களிப்பைச் செய்தவர். கொழும்பில் தமிழ்மக்களது விழாக்கள் அதிகம் நடைபெறுமிடம் கொழும்புத் தமிழ்ச்சங்கம். சங்கத்தின் வைபவங்களிலே திட்டமிட்டுச் சிலவற்றைத் தமது வாழ்நாளிலே செயற்படுத்தி வெற்றி கண்டவர். தங்கும் அறைகள். நுழைவாயில் முன் கோபுரம், சங்கத்தமிழ் சஞ்சிகை, ஆய்வுமாநாட்டு மலர்கள் என்று அவரது சேவை விரிவடைந்திருந்தது. இவை எடுத்துக் காட்டுக்களாகவே இன்று இயங்குகின்றன.

தமக்குக் கிடைத்த பதவிகளைப் பயன்படுத்தி எந்தளவு தூரம் அதிகபட்சம் சமூகநலன் சார்ந்த திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியுமோ அந்தளவுக்குப் பணிகளை முன்னெடுத்தவர் அவர். அவரது சேவையின் வீச்சால் பதவிகள் சிறப்பெய்தின.

இன்று தமிழர் சமுதாயத்திற்கு வேண்டப்படும் முக்கிய குணாம்சம் மனவிரிவு. 'மனவிரிவு' பணம் கொடுத்தோ, படிப்பாலோ பதவியாலோ வாங்கமுடியாதது. அப் பண்பு தமிழரது பூர்விகமானதொன்று. ஆனால் பல்வேறு சூழல் மாசடைவால் 'மனவிரிவு' என்பது மங்குதிசையடைந்து விட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும் முயற்சி பண்ணியே 'மனவிரிவை' நாம் ஏற்படுத்த வேண்டியுள்ளது. 'உள்ளம்' இளகுதல், கண்ணோட்டம், இரக்கப் பார்வை, துன்பத்தில் உதவுதல், உற்றுழி உதவி என்று இதன் செயற்பாடுகள் விரிவடையும். இவற்றுக்கெல்லாம் எங்கே நேரம் காலம் என்று ஏங்கும் பிரகிருதிகளையே இன்று நடைமுறையிலே கண்முன்னாலே காண்கிறோம். ஆயினும் நமது நாதனிடத்திலே உறைந்துகிடந்த இவ்வருங் குணநல மேன்மைகள் பற்றி அவர் வாழ்ந்த காலத்திலே யாரும் எண்ணிப் பார்த்தில்லை. இப்போதுதான் மூக்கில் விரலை வைக்கிறார்கள். யோசிக்கிறார்கள். விக்கிநிற்கிறார்கள். பயன் கருதாத பலனை நோக்கிப் பணிபுரியாத சீவன் கதிர்காமநாதன்.

இப்படியானதோர் செயற்பாடுகளுக்கு 'எத்தகைய வாய்ப்பை' எங்கிருந்து அவர் கொண்டிருந்தார் என்பது ஒரு பெருவினாவாகிறது. அதற்கான விடை 'அவரது குடும்ப மரபு' என்பதாகும். 'குலவித்தை கல்லாமற் பாகம் படும்' என்பது பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை கூறுவது. ஞானதீட்சண்யம் மிக்க செயல் வேகம் கொண்டவர் கதிர்காமநாதன் அவர்கள். அவரை அறிந்தோர் அவரோடு நெருங்கிப் பழகியோர் அவரது தீரமிக்க செயற்பாடுகளை நன்கு விளங்கிக் கொள்வர். புரவலர், பரோபகாரி, கொடை மனத்தினர் என்று எவ்வளவு தூரம் விதந்து பாராட்டினாலும் தகும் எனும் வகையிலே அவரது பணிகளின் மகோன்னதம் துலக்கம் பெற்றுள்ளன.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரிதாம் சொல்லிய வண்ணஞ்செயல்" என்பது குறள். எனவே எக்கருமத்தையும் சொல்வதென்பது சுலபமான அலுவல். ஆனால் சொல்லிய வண்ணம் செய்து முடிப்பதுதான் கடினமான அலுவல். தனிமனித சாணக்கியத்தையே நம்பிக்கையுடன் பிரயோகித்து வெற்றிவாகை சூடியவர் அமரர் கதிர்காமநாதன் அவர்கள். நரரை ஏத்திப் புகழ்வது என் நோக்கமன்று 'பொய்மையாளர்' என்று சுந்தரர் கூறும் நமது செயல் எல்லைவரையறை கொண்டது. புகலூர் பாடுவதே வாழ்வின் பயன்.

சாந்தி சாந்தி சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தக்காலத்திலும் எமது நினைவை விட்டு நீங்காத தலைவன் கதிர்காமநாதன் அவர்கள்

கதிரவேலு மகாதேவா
(ஆட்சிக்குழு உறுப்பினரும் செய்திமடல் தொகுப்பாசிரியரும)

75ஆவது அகவையில் காலடி எடுத்துவைக்கும் எமது தமிழ்ச் சங்கம் இதுவரை 29 தலைவர்களினால் வழிநடத்தப்பட்டு வந்துள்ளது. தமிழ்ச்சங்கத்தின் 27ஆவது தலைவராக 2010/11 ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட திரு.மு.கதிர்காமநாதன் அவர்கள் தொடர்ந்து 2011/12 காலப்பகுதியிலும் மீண்டும் ஒரு தடவை 2015/16ம் ஆண்டிலும் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டு அண்மையில் உலகின் தலை சிறந்த தமிழ்ச் சங்கமாக கொழும்பு தமிழ்ச் சங்கத்தை உயர்த்தும் அளவுக்குச் சீரிய பணியாற்றி தமிழர்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இவரது காலத்தில் உலகெங்கும் இருந்தும் தமிழறிஞர்களை எமது நாட்டுக்கு வரவழைத்து 2011இல் திருக்குறள் மகாநாட்டையும் 2012இல் உலகத் தமிழ் இலக்கிய மாநாட்டினையும் நடாத்தி தமிழ்ச் சங்கத்தின் பெயரை உலகமெங்கும் விளங்கிடச் செய்துள்ளார். 2011இல் "முப்பால்" சிறப்பு மலரும் 2012இல் "பூவல்" சிறப்பு மலரும் சான்று பகர்கின்றன. 2015இல் ஆறுமுகநாவலருக்கு விழாவெடுத்து மகிழ்ந்தோம். இதை விட சங்கத்தின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் பங்களிப்புச் செய்த ஒரு தலைவ்ர் அவர். "சங்கத் தமிழ்" என்ற சங்கத்தின் காலாண்டு வெளியீட்டினை அறிமுகப்படுத்தி எமது நாட்டின் இலைமறைகாயாக இருந்துவரும் தமிழ் எழுத்தாளர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கி அவர்களை மேலும் எழுதுவதற்கு தூண்டுதல்களை ஏற்படுத்தியுள்ளார்.

2010/11 காலப்பகுதியில் இவர் தலைவராகப் பணியாற்றியபோது, தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக் குழுவில் இணைந்து செயலாற்றும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் தமிழ் அன்பர்களைக் கூர்ந்து அவதானிக்கும் பண்பு அவரிடம் இருந்தது. அந்த வகையில் தனிப்பட்ட முறையில் என்னை யாரென்று அறியாமலேயே தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழுவில் என்னை இணைத்துக் கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தினைக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது தலைமையில் வெளிவந்து கொண்டிருந்த தமிழ்ச் சங்கத்தின் மாதாந்த செய்தி மடலினை தொகுத்தளிக்கும் பணியினைச் செய்யுமாறு என்னைப் பணித்தார். அன்றைய செயலாளர் திரு.ஆ.இரகுபதிபால சிறீதரன் அவர்களின் உதவியுடன் தொடர்ந்து 28 செய்தி மடல்களைத் தொகுத்து வெளியிடமுடிந்தது. செய்தி மடலின் 50ஆவது வெளியீட்டினை அவரது தலைமையில் வெளியிட்டு வைப்பதற்கான திகதியினையும் அவர் குறித்துக் கொடுத்திருந்தார். அவர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் 22.01.2016 அன்று அந்தப்பணி திரு.வி.ஏ.திருஞானசுந்தரம் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்களிடமும் இன்முகம் காட்டி அவர்களை அரவணைத்து தமது பணிகளில் ஈடுபடுத்தி மகிழ்விக்கும் பண்பு அவரிடமிருந்தது. சமயம், மொழி தொடர்பான பல நிறுவனங்களில் பல முக்கிய பதவிகளை வகித்து வந்த போதிலும் கூட தமிழ்ச்சங்கத்தில் வகிக்கும் பதவியினைப் பெரிதாக மதித்துச் செயற்பட்டார்.

ஆட்சிக் குழுக் கூட்டத்தில் தலைமையுரை ஆற்றிக்கொண்டிருந்தபோது அவருக்கு சுகயீனம் ஏற்பட்டது. தமிழ் மக்கள் மேல் அவர் காட்டிய அக்கறைக்கும் அன்பிற்கும் தமிழர்கள் அவர் மீது கொண்டிருந்த பற்றுறுதிக்கும் அவரது இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான மக்களே சாட்சிகளாக உள்ளனர். அவரது பிரிவினைத் தாங்க முடியாது எல்லோரும் கண்கலங்கி நின்றிருந்தனர். அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுவதுடன் அவரது சீரிய பணிகளை மனதில் நிறுத்தி அவருக்கு நன்றியறிதல்களைத் தெரிவிப்பதும் நேசம்மிக்க அவரது துணைவியாருக்கு ஆறுதல் மொழி வழங்குவதும் எமது கடமையாகும்.

ஒவ்வொரு மனிதனும் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றினால் எமது தமிழ்ச் சமூகம் மேன்மை பெறும் என்பது என்னுடைய எண்ணமாகும். அவருடைய நினைவு என்றும் எங்கள் மனங்களில் நிலைத்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை மிக்க ஒரு தலைவன்
# அமரர் கதிர்காமநாதன்

மு.மனோகரன்
ஆட்சிக்குழு உறுப்பினர்

ஆளுமை மிக்க தலைவர் ஒருவர் எதிர்பாராதவேளையில் எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்ததையிட்டு மிகவும் வேதனையடைகின்றேன். அமரர் கதிர்காமநாதனுடன் நான் பழகிய காலங்களிலெல்லாம் அவர் ஒரு சகோதரனாகவும் தோழனாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக இனிமையாகப் பழகி எல்லோர் மனத்தையும் கொள்ளை கொள்ளும் ஒரு பண்பாளனாகவும் விளங்கினார். அது மட்டுமல்லாமல் ஒவ்வொருவர் உள்ளத்தையும் ஆழமாக ஊடுருவி அவர்கள் பண்புகளைக் கண்டறிந்து அவர்களுக்கேற்ற முறையில் அணுகும் முறை வேறு யாரிடமும் இல்லாத ஒரு கலையாகும். இதை அவருடன் பழகிய எவரும் ஒத்துக்கொள்வர். அந்த வகையில் அவர் திடீரென எம்மை விட்டுப் பிரிந்தது ஏற்றுக் கொள்ளமுடியாமல் இருக்கிறது. அவர் செய்த சீரிய பணிகளை நாம் தொடர்ந்து செய்வதுதான் அவருக்குச் செய்யும் கைம்மாறாகும். தமிழ் வாழும் வரை எமது தமிழ்ச் சங்கமும் வாழும். எமது தமிழ்ச் சங்கம் வாழும் வரை கதிர்காமநாதனின் நாமமும் நிலைத்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமெல்லாம் பேசப்படும் கதிர்காமநாதன்

கலாபூஷணம் கே.பொன்னுத்துரை
கொழும்புத் தமிழ்ச் சங்கஆட்சிக்குழுஉறுப்பினர்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செயலாளரும், உலகசைவப் பேரவையின் பொதுச் செயலாளரும் மற்றும் பல சமூக, சமய அமைப்புகளின் முன்னிலை உறுப்பினருமாகிய நயினாதீவு மண்ணின் மைந்தருமான கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்.

1944ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 21ந் திகதி பிறந்த இவர் நயினாதீவு 5ம் வட்டாரத்தை சேர்ந்தவராவர். கடந்த பல தசாப்த காலமாக சமூகப் பணிகளில் தன்னை முழுநேரத் தொண்டாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

1998 ஆம் ஆண்டுகொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினராக இணைந்து கொண்ட இவர், ஆட்சிக்குழு உறுப்பினராக, துணைத் தலைவராக, மூன்று தடவைகள் தலைவராகவும் பணியாற்றி சங்கம் பெருமை கொள்ளும் வகையில் தன் பணியினை ஆற்றியுள்ளார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சியில் அவர் காட்டிய அளப்பரிய சேவை என்றும் மறக்க முடியாத ஒன்றாகும்.

புன்னகை பூத்தமுகம் என்பதற்கோர் உதாரணமாகத் திகழ்ந்த அவர், ஆளுமையும் அமைதியும் கொண்ட அவருடைய 72ஆவது வயதில் தனது மூச்சை அடக்கிக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதாரம் பூசாத அந்த முகத்தின் அழகு என்றுமே நியாயத்தின் பக்கமே சார்ந்து நிற்கும். அவரின் அந்த முத்தான புன்னகையே யாரையும் தன்பால் இழுத்துக் கொள்ளும் தன்மையே அவரை மூன்று முறை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் பதவியில் அமர்த்தி அழகு பார்த்தது.

திட்டமிட்ட செயல்வடிவம் கொண்ட சீரிய சிந்தனையாளன். ஏதிர்காலங்களில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்கவுள்ள சிலப்பதிகாரப் பெருவிழா, உலகத் தமிழ் இலக்கியமாநாடு, அடுத்தவருடம் நடைபெறவேண்டிய சங்கத்தின் பவளவிழா (75) ஆண்டு விழா என்பவற்றுக்கான திட்டங்களைத் தீட்டி செயல் வடிவம் கொடுப்பதில் தன் கவனத்தை செலுத்திவந்தார்.

விருந்தினர் விடுதி, வாசிகசாலை வளர்ச்சி என்று தமிழ் கூறும் நல்லுலகம் போற்றத் தன் பணியைசெய்தவர்

தான் பிறந்த நயினாதீவு மக்களுக்கும், நயினாதீவு சமூக, பொருளாதார, கல்விகலாசார அமைப்பின் ஆரம்பகால துணைத் தலைவராகவும் பணியாற்றி பெருமை சேர்த்தவர். அத்துடன் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் அக்கல்லூரியின் கொழும்புக் கிளைச் சங்கத் தலைவராகவும் (2007 -2009) பணியாற்றியவர்.

இவர் பல சர்வதேச மாநாடுகளிலும் கலந்து சிறப்புரையாற்றியுள்ளார். இவருக்கு பதினைந்துக்கு மேலான கௌரவப் பட்டங்களும் வழங்கி பல அமைப்புகள் கௌரவப்படுத்தியுள்ளன.

எப்போதும் சிரித்தமுகத்துடன் அனைவரையும் அன்புடன் கையைப் பிடித்து அளவளாவுவதும் அவரின் இனியபண்பாகும்.

தலைநகர் தமிழ்ச் சமூகமக்களுக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு உளநேயப் பாங்குடன் காத்திரமான பணியை மேற்கொண்டார். கதிர்காமநாதன் செய்த அப்பணிகள் காலம் தோறும் பேசப்படும் என்பது யதார்த்தமான உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மென்மையான இதயம் கொண்ட நண்பர் நாதன்

கலாநிதி சின்னத்துரை தனபாலா
உபதலைவர் - அகில இலங்கை இந்து மாமன்றம

"இன்றிருப்போர் நாளை இங்கு இருப்பதென்ன உண்மை?" என்று கவிஞர் ஒருவரின் பாடல் வரிகளைக் கேட்டிருக்கிறோம். அது எவ்வளவு தூரம் நிச்சயமானது என்பது இப்போது தெரிந்துவிட்டது. எல்லாமே கனவுகளாக நடந்து முடிந்துவிட்டன. நண்பர் கதிர்காமநாதன் திடீர் மறைவு எங்கள் நெஞ்சத்தைவிட்டு நீங்காத நினைவாகிவிட்டது. இவ்வளவு விரைவாக நண்பரின் வாழ்க்கைப் பயணம் முடிந்துவிடும் என்று யாராவது நினைத்திருப்பார்களா?

"என் கடன் பணி செய்வதே" என்பதனை இலட்சியமாகக் கொண்டு உடல் உருகி ஒளி வழங்கும் மெழுகுவர்த்திபோல திகழ்ந்து, ஒளிவழங்கி மறைகின்ற கற்பூரம்போல பூவுலக வாழ்க்கையை நிறைவுசெய்து கொண்ட நண்பர் நாதன் சைவத்தையும் தமிழையும் தன் இரு கண்களாகப் போற்றியதுடன், சமயப் பணியுடன் சமூகப் பணியையும் முன்னெடுத்துச்சென்ற பெருமகன்.

எனது குடும்பத்தினருக்கும் நண்பர் நாதனின் குடும்பத்தினருக்கும் இடையிலான நட்புறவு நாற்பத்தைந்து வருடகாலத்திற்கும் மேலானது. எனது சகலன் திரு.குணராஜா அவர்கள் மூலமாகக் கிடைத்த நண்பருடனான தொடர்பு, இன்று அவரை எங்கள் குடும்பதினரின் பேரன்பிற்குரியவராக உயர்த்திச் சென்றுள்ளது என்பதை சொல்லத்தான் வேண்டும்.

இரண்டு தசாப்தகாலத்திற்கு முன் எனது மூத்தசகோதரர் எஸ்.ரி.எஸ்.அருளானந்தன் கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை உறுப்பினர்களுள் ஒருவராக இணைந்து கொண்டமையும் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்க செயல்பாடுகளிலும், தொடர்ந்து உலகசைவப் பேரவை இலங்கைக் கிளையின் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டமையும் கடந்தகால நிகழ்வுகள், இந்த இரு நிறுவனங்களிலும் உப தலைவராகவிருந்த நான் அவருடன் இணைந்து பணியாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும் பேறாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுகிறேன். நான் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஒரு உறுப்பினர் என்பதற்கும் மேலாக, முன்னர் சிறிதுகாலம் உபதலைவராக இருந்தபோது, சங்கத்தின் தலைவராகவிருந்த நண்பர் நாதனுடன் இணைந்து பணியாற்றியதையும் என்னால் மறக்கமுடியாது.

நண்பர் நாதன் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முகாமைப் பேரவை உறுப்பினர்களுள் ஒருவராக இணைந்து பின்னர் பிரதிப் பொதுச் செயலாளராகவும் தொடர்ந்து பொதுச் செயலாளராகவும் உயர்ந்துகொண்டவர். இந்துமாமன்ற சமூகநலன் குழுத் தலைவரான என்னுடன் இணைந்து நண்பர் நாதன் போர்ச் சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்டு வன்னிப் பகுதியில் முகாம்களில் தங்கியிருந்த பொதுமக்களை இந்து மாமன்றத்தின் சார்பாக நேரில் சென்ற சந்திப்பதற்கும், நிவாரணப் பொருட்களையும், தேவையான உதவிகளையும் வழங்குவதற்கும் காட்டிய ஆர்வமும் அக்கறையும் பெரிதும் போற்றப்படவேண்டியதாகும். பொதுமக்கள் இடைத்தாங்கல் முகாம்களிலிருந்து தங்கள் சொந்த இடங்களுக்கும், உறவினர் வீடுகளுக்கும் சென்றதன் பின்னர் அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்குவதில் நண்பர் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் என்றென்றும் பாராட்டப்படவேண்டியதாகும். வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவந்த மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் விழாக்கள் போன்ற பல நிகழ்வுகளில் மட்டுமல்ல, இந்தியா, கனடா, தென்ஆபிரிக்கா, மலேசியா போன்ற நாடுகளில் நடந்த உலகசைவப் பேரவை மாநாடுகள் மற்றும் சமயவிழாக்கள் போன்றவற்றிலும் நானும், நண்பர் நாதனும் இணைந்து கலந்துகொண்ட அந்த இனிய நிகழ்வுகள் என்றுமே மறக்கமுடியாதவை.

நண்பர் நாதனின் ஆளுமையைக் கண்டு வியந்திருக்கிறேன். சமய சமூகநல சேவைகளின் போது பல சவால்களுக்கும் இடையூறுகளுக்கும் மத்தியில் முகம் கொடுத்து, அவற்றை முறியடித்து, தலைமைத்துவத்தை வெற்றியடையச் செய்வதில் அவர் சாதனை படைத்திருப்பது வரலாற்றுப் பதிவாகும். அவரது சிறந்த தலைமைத்துவத்தின் ஊடாக கொழும்புத் தமிழ்ச் சங்கம் வரலாறு காணாத வளர்ச்சியைப் பெற்றருப்பது மறுக்க முடியாது. இந்து மாமன்றப் பொதுச் செயலாளராகவிருந்த காலத்திலும் மாமன்றம் வளர்ச்சியும் சிறப்பான செயற்பாடுகளிலும் நண்பரின் பங்களிபபு பெரிதும் பாராட்டப்படவேணடியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமே சிரித்தமுகம்; மென்மையாகப் பேசும் சுபாவம்; அன்பு இதயம்; அரவணைக்கும் அன்பு உள்ளம்; இத்தனை குணஇயல்புகளைக் கொண்டிருந்த அவர்,

*"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம்"*

என்ற வள்ளுவ் பெருமானின் குறளுக்கு அமைய பொறாமை, பேராசை, பெருங்கோபம், கடுஞ்சொல் என்பவைகைளத் தவிர்த்து அறநெறியில் வாழ்ந்தவர் என்பதைசிறப்பாகச் சொல்லலாம்.

நானும், நண்பரும் நாளாந்தம் தொலைபேசி ஊடாக உரையாடிக் கொள்வதன் மூலம் சமய சமூகச் செய்திகள், உலகியல் புதினங்கள், பண்டிகைக் காலங்களில் வாழ்த்துக்கள் என்பவைகளை பரிமாறிக் கொண்ட அந்த இனிமையான நிகழ்வுகளை எப்படி மறந்துவிடமுடியும்? கடந்த தைப்பொங்கல் தினத்தன்று (15.01.2016) காலை மின்னஞ்சல் மூலமாக நண்பரிடமிருந்து கிடைத்த சிவனின் படத்துடன் இணைந்த பின்வரும் அமுதமொழிகள்தான், அவரது இறுதிச் செய்தியாக இருக்கும் என்று நினைத்திருக்கவே முடியாது.

*"பூசிப்பதும் நேசிப்பதும்*
*யோசிப்பதும் சுவாசிப்பதும் சிவாயநம.*
*சிவகாலை வணக்கம்."*

சிவபதமடைந்த நண்பருக்கு இதனையே சமர்ப்பணம் செய்கிறேன்.

ஈருடல் ஓருயிராக துணைவியார், ஈஸ்வரி அக்கா அவர்களுடன் இல்லற வாழ்வில் இணைந்திருந்த அவர் தனது குடும்ப அங்கத்தவர்களுக்கு ஓர் அறிவூட்டும் ஒளிவிளக்காக இருந்து கணவரின் மறைவினால் ஈஸ்வரி அக்காவுக்கு ஏற்பட்டிருக்கும் துயரத்தில் நானும் என் குடும்பத்தினரும் பங்கு கொள்வதுடன், நண்பரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்பாந்தவராக நின்று உதவிபுரிந்த அமரர் கதிர்காமநாதன்

உடப்பூர் வீரசொக்கன்
தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர

*இளமையும் நில்லா யாக்கையும் நில்லா*
*வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா*
*புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்*
*மிக்க அறமே விழுத்துணை ஆவது*

மணிமேகலை கூறும் இப்பாடல் வரிக்கிணங்க நிலையற்ற செல்வமாக இருப்பை எடுத்தோம்பும் அணிகலமே தான் மேற்கொண்ட புகழே. இவ்வுவமைக் கிணங்க சமூகப் பணியிலும் சமுதாய எண்ண ஓட்டத்திலும் ஆன்மீக அறநெறியிலும் தன்னை அர்ப்பணித்து அகலக் கால் பதித்து அர்த்தபுஷ்டியான சேவை உணர்வோடு தொண்டுள்ளம் கொண்டவராகப் பவனி வந்தவர் முத்தையா கதிர்காமநாதன்.

வர்ணஜாலம் பரப்பும் சூரியக் கதிரானது திக்கெட்டும் வெண்கதிர்களைப் பரப்பி சுடர்விட்டு பிரகாசமாக விண்ணில் வலம் வந்து அந்தியானதும் தனது கதிர்களை அடக்கி தனது பிரகாசத்தை இழந்து அமர்வது போல அமரர் கதிர்காமநாதனும் நாதம் ஒளிபரப்பி ஆன்மீகத்துறையுடனும் சமூக நலப்பாங்கிலும் சமுதாய ஊட்டத்திலும் தனது கதிர் என்ற சேவையை, தொண்டை பரப்பி அமரத்துவமானார் என்ற துயரச் செய்தியெல்லாம் திகைப்படைய வைத்தது.

அமரர் கதிர்காமநாதன் ஆற்றல், ஆளுமை, செயற்திறன், தூரநோக்கான சிந்தனை என்பனவற்றை அவ்வப்போது வெளிப்படுத்துவதை யாம் கண்டோம்.

சப்த தீவுகளில் ஒன்றான நயினாதீவில் 1944-.03.21 ஆம் திகதி முத்தையா தம்பதியினர்களுக்கு நறுமணம் வீசும் நல்மகனாகப் பிறந்தவர் தான் கதிர்காமநாதன். நயினாதீவு அம்மனின் ஆன்மீகச் சூழலில் கல்வியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டு, தனது கல்விச் செல்வத்தை மேலும் பெறவேண்டி சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம், நயினாதீவு கணேச வித்தியாலயம், நயினை மகா வித்தியாலயம், ஆகியவற்றில் பயின்று பின் உயர் கல்வி நெறியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கசடறக் கற்றுப் பிரகாசித்தார்.

சிரித்த வதனமும் அனைவரையும் அன்பால் ஆகர்ஷிக்கின்ற ஆத்மீக ஊடாட்டமும் மனிதநேயப் பண்பும், உதவிபுரியும் ஈதலும் மற்றவர்களை தன்பால் ஈர்க்கின்ற ஆளுமையும் ஒருங்கே கொண்டவராக கதிர்காமநாதன் திகழ்ந்தார். தலைநகரில் தமிழ்ப் பணிபுரியும் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் இணைத் தலைவராக இருந்து ஆக்கப் பணிபுரிந்த கதிர்காமநாதன் 2016 ஆம் ஆண்டும் தமிழ்ச் சங்கத் தலைமைப் பதவியை அலங்கரித்த செம்மலானார்.

அன்னார் காலத்தில் தமிழ்ச் சங்கத்தின் பணி பரிணாம வளர்ச்சியைக் கண்டது. சங்கத்துக்கான முத்திரை வெளியீடு, சங்க வீதி பெயர் உருவம் பெற்றமை, கட்டடப் பணிகள் விரிவாக்கம் பெற்றமை அன்னாரின் நிர்வாகக் கட்டமைப்புக்கு விதந்துரைக்கும் ஆக்கப்பணி என்றால் மிகைப்படுத்தப்படாத கூற்றாகும்.

நயினாதீவு ஆன்மிகச் சூழல் பண்பாட்டு விழுமியங்களை நேசிக்கின்ற கனவான்களை ஈன்றெடுத்துள்ளது. இதைப் பின்புலமாகக் கொண்டு அச் சூழலில் வந்த அமரர் கதிர்காமநாதன் தன் ஆOன்மீகச் செயற்பாடுகளின் பரிணாமத்தை ஏற்படுத்த தவறவில்லை. இதை உள்நோக்குடன் தான் ஆன்மீகத்தில் ஈடுபட்டவராக நிலை நிறுத்தியுள்ளார்.

***இலங்கை இந்து மாமன்றத்தின் நீண்ட காலமாக செயலாளராக பணிபுரிந்த அன்னார் கொழும்பு விவேகானந்த சபைத் துணைத்தலைவராகவும் உலக சைவப்பேரவையில் செயலாளராகவும் நயினை சமூக பொருளாதார, கல்வி, கலாசார ஒன்றியத்தின் ஆரம்ப காலத் துணைத் தலைவராகவும் அலங்கரித்து உணர்ச்சிபூர்வமாக தொண்டாற்றிய ஆர்வலர் ஆவார்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பிறந்த நயினாதீவு மக்களுக்கு தலைநகர் தமிழ் சமூக இதர மக்களுக்கும் தன்னை விரித்துக்கொண்டு உள நேயப்பாங்குடன் காத்திரமான பணியை மேற்கொண்டார் கதிகாமநாதன். காலம்தோறும் அப்பணிகள் பேசப்படும் என்பது யதார்த்தமான உண்மையாகும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. தன் கடன் பணி செய்து கிடப்பதே என்ற திருவாய் மொழிக்கிணங்க மாமன்ற பணியை மனமுவந்து ஏற்று திறம்பட செய்வதில் உதாரண புருஷராக திகழ்ந்தார். தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சியிலும் சமய நெறிமுறையிலும் தனது பணியை உணர்வுபூர்வமாக மேற்கொண்டார்.

சமுதாயப் பண்பாட்டில் பிறந்த மனிதர் வாழ்வும் சாவும் இயற்கையானாலும் கூட தனித்து வாழாது சமூக நெகிழ்ச்சிப் போக்கில் தன்னை இணைத்துக் கொண்டு வாழுகின்ற அவரின் வகிபாகம் முன்னுதாரணமாக அமையும் போது என்றும் சமூகத்தால் போற்றப்படும்.

*அவ்வாறே அமரத்துவம் அடைந்த கதிர்காமநாதனின் தொண்டுள்ளம் துணைநின்றது. இதனால் என்றும் போற்றி நினைவு கொள்ளப்படுகின்றார். சமயப் பற்றாளனாக காணப்படும் கதிர்காமநாதன், கதிர்காமக் கந்தன்மேல் தீராத நம்பிக்கை கொண்டவர். கந்தனைக் கண்டு வணங்கி வருவதில் நாட்டம் கொண்டவராக இருந்து வந்துள்ளார். அது மட்டுமல்ல கடல் கடந்த நாடுகளில் நிகழ்வுறும் சைவ மாநாடுகள், கருத்தரங்குகளில் பங்குபற்றி தீட்சண்யமான கருத்துக்களை நயம்பட உரைப்பார்.*

சப்ததீவு எனப் போற்றப்படும் நயினையின் ஆன்மீக உணர்வாளர்களையும் ஆற்றல் கொண்ட வல்லவர்களாகவும் ஈன்றெடுத்த அந்த மண்ணில், அவதரித்த கதிர்காமநாதனின் செயற்பாடுகள் முன்னுதாரணமான முதுசமாக ஜொலித்து நிற்கின்றன. அவரின் தன்னடக்கம், சமூக நேயப்பணி, மனிதநேயம், ஆளுமை மற்றவர்களை வழிநடத்திச் செல்லும் பாங்கு என்பன அன்னாரிடத்தில் காணப்படும் செந்நெறிகளாகும்.

பொதுப்பணியிலும் சமூகத் தொண்டிலும் தன்னை அர்ப்பணித்து சேவையாளனாக ஆகர்ஷித்த கதிர்காமநாதன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமையின் அடிநாதம்

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

கதிர்காமநாதன்
பன்முகஆளுமையின்
ஒற்றைப் பிரதிபிம்பம்
கொழும்புத்
தமிழ்ச்சங்கத்தின்
காவலனாய் நின்று
தொழும்புகள் செய்த
தனிப்பெருந் தலைவன்
தொட்டதுதுலங்கச்
சேவைகள் புரிந்து
எம்மை
விட்டகன்றிட்ட
வினைத்திறனாளன்

ஐயனே!
உடலுழைப்போடு
பொருளையுமீந்தாய்
ஈற்றில்
உயிரையுமன்றோ
உவந்தனைதந்திட.

இரவும்பகலும்
ஒருமையென்றாகக்
கருமங்களியற்றிய
சாங்கக்
காவலனானாய்.
தலைமைப் பண்பின்

சகலமுமமைந்தே
பலமுகங் கொண்ட
பலரையும் ஒருவழி
நிலைத்திடவைத்து
நினைத்ததைமுடித்தனை.

எடுத்ததைமுடிக்கும்
இயல்பினனானதால்
முடிந்தனஅனைத்தும்
முழுமையின் பாற்பட

உலக இலக்கிய
மாநாடென்ன
ஒன்றியவேறு
பற்பலவென்ன
கலையும் தமிழும்
கோலோச்சிடநீ
கொண்டதாம் பணிகள்
கூறுதற்கரிதே

புகழினைவேண்டார்
புவியினில் இல்லை
புகழுனைத் தேடிப்
பணிந்ததுபுண்ணிய!

உலகிற் பற்பல
ஊர்களுஞ் சென்று
கலாசாரபகிர்வுகள்

புரிந்தனைதமிழின்
பலபடுமேன்மையைப்
பேசியும் மகிழ்ந்தனை

உற்சாகமாகவே
உள்ளேநுழைந்தநீ
அற்பநொடிக்குள்
அசைவற்றுவீழ்ந்தனை

நிலையிலாவாழ்வின்
நிதர்சனம் நானென
ஈற்றில்
சத்தியங் காட்டிச்
சென்றனைஐயா!

காலம் அழிந்திடும்
கொண்டநின் புகழோ
காலங்காலமாய்
கொலுவீற்றிருக்கும்

மறந்திடோம் உன்றன்
மதிப்பிடற்கொண்ணா
அரும்பணிதன்னை
ஐய!எம் நெஞ்சில்
நிரந்தரமானாய்
நினைப்போலும் உண்டோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈடில்லாப் பேரிழப்பு

பட்டயக் கற்கைநெறிப் பயிற்சி தன்னைப்

பண்டிதர்கள் தொடக்கி வைத்தார்கள் இந்த ஆண்டில்

தொட்டதனைத் தொடர்ந்துசெல பங்க ளித்த

தலைவர்ஐயா கதிர்காம நாதன் எம்மை

விட்டகன்றார் இடைநடுவே பரம பாதம்

வேதனையின் பாற்பட்டோம் மாண வர்கள்

மட்டில்லாத் துன்பமது தமிழ்ச்சங் கத்தின்

மீட்கவொண்ணா இழப்பெவர்தான் ஈடு செய்வார்.

பட்டயக் கற்கைநெறி மாணவர்கள் - 2015 - 2016

---

### தொகுப்பாளர் உரை....

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர். மு.கதிர்காமநாதன் இயற்கை எய்தியமை குறித்து கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு ஒரு அஞ்சலி நிகழ்வினை நடத்துவதோடு நினைவேடு ஒன்றினையும் வெளியிடுவதற்குத் தீர்மானித்துள்ளது. அத்தீர்மானத்திற்கு இணங்க இவ்வஞ்சலி ஏடு வெளியிடப்படுகிறது. இவ் ஏட்டிற்கு ஆக்கங்கள் தந்துதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் சங்கம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இம் முயற்சியில் எம்மோடு திருமதி.வசந்தி தயாபரன், திரு.கதிரவேலு மகாதேவா, திரு.மு.மனோகரன், திரு.அரியரத்தினம் ஆகியோர் பிரதி ஒப்பீடு செய்ய உதவினர். அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொகுப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் நினைவுகள்..........









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

இல 7, சங்கம் ஒழுங்கை கொழும்பு - 06.
தொலைபேசி : 0112363759
மின்னஞ்சல் : tamilsangamcolombo@outlook.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org